விலை ரூபா: 7.00

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்:- பத்து

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | புரட்டாதி 15 | வெள்ளிக்கிழமை | (01.10.2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 287

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் சீமெந்து
முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

# வட - கிழக்கு மனித உரிமைகள்குழு நாளை ஜெனிவா புறப்படுகிறது!

ஐ.நா. மனித உரிமை அமைப்புக்களுடன் யாப்பு குறித்து ஆராய்வு

(கொழும்பு)

**வடக்கு கிழக்கு மனித உரிமை ஆணைக்குழுவின் முக்கிய பிரமுகர்கள், அமைப்பின் யாப்பு தயாரிப்பு தொடர்பாக ஆராய்வதற்காக நாளை சுவிஸ்லாந்தின் ஜெனிவா நகருக்கு புறப்படுகின்றனர்.**

**தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தலைமையிலான அரசியல் குழுவினர் ஜெனிவாவில் தங்கியிருக்கும் நிலையில் வடக்குக் கிழக்கு மனித உரிமை ஆணைக்குழுவின் பிரமுகர்கள் அங்கு செல்கின்றனர்.**

வடக்கு கிழக்கு மனித உரிமை ஆணைக் குழுவிற்கான நிர்வாக யாப்பு ஒன்றைத் தயாரிக்கும் நோக்கில் நாவாந்துறை அருட் தந்தை கருணாரட்ணம், வைத்திய கலாநிதி சிவபாலன், சட்டத்தரணி சிவபாலன், பாராளுமன்ற உறுப்பினர்களான ஜோசப் பரராஜசிங்கம், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சந்திரநேரு ஆகியோர் நாளை ஜெனீவாவிற்குப் புறப்பட்டுச் செல்கின்றனர்.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் அமைப்பினரோடு கலந்துரையாடி வடகிழக்கு மனித உரிமை ஆணைக் குழுவிற்கு யாப்பொன்றைத் தயாரிக்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் அடிப்படையிலேயே சந்திப்புக்கள் இடம்பெறவுள்ளதாக ஆணைக்

(10 ஆம் பக்கம் பார்க்க)



சுவிஸ்லாந்து விமான நிலையத்தில் புலிகளின் பிரமுகர்களுக்கு நேற்று அமோக வரவேற்பு அளிக்கப்பட்டது.

# புலிகளின் உயர்மட்டக்குழு ஜெனிவாவில் கூடுகிறது!

## இன்று சர்வதேச சட்டவல்லுனர்களுடன் முக்கிய ஆராய்வு

(ஜெனிவா)

**தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தலைமையிலான விடுதலைப் புலிகளின் உயர்மட்ட அரசியல் குழு இன்று சுவிஸ்லாந்தின் ஜெனிவா நகரில் கூடுகின்றது.**

**சமாதானப் பேச்சுவார்த்தை விவகாரத்தில் அரசின் காலம் கடத்தும் போக்கிற்கு முற்றுப்புள்ளி வைக்கவும் விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை திட்டவரைபு குறித்து சட்டவல்லுனர்களுடன் கலந்துரையாடி தீர்க்கமான முடிவுகளை எடுக்கவும் உயர்மட்ட சந்திப்புக்கு ஏற்பாடாகி இருப்பதாக தெரியவருகிறது.**

தமிழீழ விடுதலைப் புலிகளே சமாதானப் பேச்சுவார்த்தைக்குத் தடையாக இருக்கிறார்கள் என ஜனாதிபதியும் அரசும் மேற்கொண்டுவரும் பொய்ப்பிரசாரத்தை முறியடிக்கும் வியூகங்களை வகுக்கும் பொருட்டு விடுதலைப் புலிகளின் உயர்மட்ட அரசியல் குழுவினர் ஜெனீவா நகரில் இன்றும் நாளையும் கூடி ஆராயவுள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தலைமையில் தமிழீழ நீதி நிர்வாகப் பொறுப்பாளர் பரா, காவல்துறைப் பொறுப்பாளர் பா. நடேசன், மட்டு - அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் உட்பட விடுதலைப் புலிகளின் பிரமுகர்கள் நேற்று ஜெனீவா சென்றடைந்தனர். அங்கு சென்ற விடுதலைப் புலிகளின் பிரமுகர்கள் சுவிற்சர்லாந்தின் அரசியற் பிரமுகர்களுடன் பேச்சு நடத்தியுள்ளனர்.

இன்று ஜெனீவா நகரில் அரசியற் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையில் அரசியல் உயர்மட்டக்குழு

(10 ஆம் பக்கம் பார்க்க)

# நயினைக் கடலில் நாகம் படமெடுத்தாடி அற்புதம்!

(ஊர்காவற்றுறை)

நயினாதீவுக் கடற்பரப்பில் நாகபாம்பு ஒன்று படமெடுத்து ஆடிய அதிசய அற்புதமொன்று நிகழ்ந்துள்ளது.

நடுக்கடலில் படமெடுத்தாடிய நாக பாம்பு பின்னர் நீந்திச் சென்று மறைந்து விட்டது.

கட்டுமரத்தில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த மீனவர் ஒருவரே இவ் அற்புதத்தைக் கண்டுள்ளார்.

நாகபூசணி அம்மனின் அருளாட்சி நடைபெறும் நயினைக் கடலில் நடைபெற்ற இவ் அற்புதம் தொடர்பாக அப் பகுதி மக்கள் ஆச்சரியமடைந்துள்ளனர்.

(ற)

# மன்னாரில் நேற்றிரவு இனந்தெரியாதோர் சூடு

## ஒருவர் பலி; மற்றொருவர் காயம்

(புத்தளம்)

மன்னார் கருகல் பகுதியில் நேற்றிரவு 9 மணியளவில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவம் ஒன்றில் குடும்பஸ்தர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். மற்றொருவர் காயமடைந்த நிலையில் மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த இரு இளைஞர்களை பின்தொடர்ந்து சென்ற இனந்தெரியாத நபர்கள் அவர்களை சுட்டுவிட்டு தப்பிச்சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவத்தின்போது ஒரு பிள்ளையின் தந்தையான இஸ்மைல் சலீம் (வயது36) என்பவர் உயிரிழந்தவராவர்.

(ச)

# சூட்டுக் காயங்களுடன் இளைஞனின் சடலம் மீட்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு ஏறாவூர்ப் பகுதியில் வீட்டில் இருந்து அழைத்துச் செல்லப்பட்ட இளைஞர் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் நேற்றுக் காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

தர்மலிங்கம் கோபாலகிருஷ்ணன் (வயது 19) என்ற இளைஞனே சடலமாக மீட்கப்பட்டவர் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

ஏறாவூர் ஐயன்கேணியில் உள்ள பிரஸ்தாப இளைஞனின் வீட்டிற்கு நேற்று முன் தினம் இரவு 9 மணியளவில் வந்த ஆயுததாரிகள் நால்வர் பிரஸ்தாப இளைஞனிடம் விடுதலைப் புலி உறுப்பினர் ராஜா என அழைக்கப்படும் லிங்கையா செல்வராஜா என்பவரின் வீட்டைக் காட்டுமாறு கோரியதாகவும் அதற்கு இளைஞன் தனக்குத் தெரியாதென்று பதிலளித்ததால் ஆயுததாரிகள் அவரை அழைத்துச் சென்றதாகவும் ஏறாவூர்ப் பொலிஸாரின் ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மேற்படி இளைஞன் நீர்கொழும்பில் உள்ள நகைக்கடை ஒன்றில் தொழில் புரிபவர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

(ச-121)

# அமெரிக்கத் தூதர் கூட்டமைப்பு சந்திப்பு

(கொழும்பு)

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜெப்ரிலங்ஸ்ரீட்டை சந்தித்து பேச்சு நடத்தியுள்ளனர்.

இச் சந்திப்பு கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதுரகத்தில் இடம்பெற்றது.

(இ-121)

# கிருபானந்தவாரியார் வாழ்க்கை வரலாறு

## புகைவண்டியில் நடந்த ஒரு நிகழ்ச்சி

தொடர் இல: 20



ஒரு சமயம் திருச்சிராப்பள்ளியிலிருந்து நான் ஈரோடுக்கு இரண்டாம் வகுப்பில் பிரயாணம் செய்து கொண்டிருந்தேன். அந்த ரெயில் பெட்டி நீளமாக இருக்கும். அப் பெட்டியில் பிரயாணம் செய்யும் ஒரு பிராமண வாலிபர் எல்லாரிடத்திலும் தமாஷாகப் பேசிக்கொண்டிருந்தார். நான் அவர்கள் பேச்சில் கலந்துகொள்ளாமல் ஒரு புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந தேன்.

அவர் என்னைப் பார்த்து "ஐயா உங்களை ஒரு கேள்வி கேட்பேன். தாங்கள் யோசிக்காமல் பதில் சொல்ல வேண்டும்" என்று ஒரு போடு போட்டார். நான் யோசிக்காமல் பதில் சொல்லுமாறு இவர் சொல்லுகின்றாரே! என்ன கேட் பாரோ! என்று எண்ணித் திகைத்தேன். "நல்லது கேளுங்கள்" என்று சொல்லிவிட்டு சடக்கர மந்திரத்தை மனத்திற்குள் ஜெபித்துக் கொண்டிருந்தேன். அறிவுக் கறிவாக நின்று ஆண்ட வன் தானே உணர்த்தவேண்டும் என்று எண்ணினேன்.

அவர் சட்டைபோட்டுக் கொள்ளுங்கள், அங்க வஸ்திரம் போட்டுக்கொள்ளுங்கள், உருத்திராக்க மாலை போட்டுக் கொள்ளுங்கள், செயின் போட்டுக்கொள்ளுங்கள் என்று நாம் கூறுகின்றோம். வாய்வழியாக உண்ணுகின்ற பொருள்களை வடை சாப்பிடுங்கள், பால் குடியுங்கள், பாயசம் சாப்பி டுங்கள் என்று கூறுகின்றோம். வெற்றிலை பாக்கைச் சாப்பிடுங்கள் என்று கூறாமல் போட்டுக் கொள்ளுங்கள் என்று கூறுகிறார்களே இதற்கு என்ன காரணம்? யோசிக்காமல் சொல்லுங்கள் என்றார்.

நான் உடனே பதில் கூறினேன். பசியை ஆற்றுகின்ற உணவுப் பொருள்களைச் சாப்பிடுங்கள் என்றும் அலங்காரப் பொருள்களாகிய ஆடை,அணி கலன்களை போட்டுக் கொள்ளுங்கள் என்றும் கூறுகின்றோம்.

"வயிறு நிறைய உண்டபின் வாய்க்கு அலங்காரமாக வெற்றிலை, பாக்கை போட்டுக் கொள்கின்றோம். கண்ணுக்கு மை போட்டுக்கொள்வது போல் வாய்க்கு அலங்காரமாகத் தாம்பூலம் போட்டுக்கொள்கின்றோம். ஆகவே, தாம்பூலம் போட்டுக் கொள்ளுங்கள் என்ற வார்த்தை அலங்காரப்பொருள் என்று குறிப்பிடுகின்றது. எனவே நமது பெரியோர்களின் பேச்சில் நுட்பங்கள் இருக்கின்றன"என்று கூறினேன். அதைக்கேட்டு அவர் ஆச்சரியமடைந்திருந்தார். "ஐயா! நான் ஒரு ஆயிரம் பேரைக் கேட்டிருப்பேன் எனக்கு விஷயம் விளக்காமல் தான் கேட்டேன். யாரும் சரியான பதில் சொல்லவில்லை. தாங்கள் கூறிய விடை எனக்கு வெகு திருப்தியைத் தருகிறது என்று கூறினார்.

## மொரப்பூ்ர் ரயில்வே கார்டு

தருமபுரி என்ற ஊருக்கு நான் விரிவுரை புரியப்போயிருந்தேன். ஒரு திருமண வீட் டில் விரிவுரை செய்தேன். விரிவுரை முடிந்த பின் ஒரு காரில் என்னை அழைத்துக்கொண்டு வந்து மொரப்பூரில் சேர்த்தார்கள். மறுநாள் தஞ்சைக்கு அருகில் உள்ள துரையூர் என்ற ஊரில் விநாயகர் கோவிலில் கும்பாபி ஷேகம் அங்கு விரிவுரை செய்ய ஒப்புக்கொண்டிருந்தேன். அப்போது யுத்த நெருக்கடி மொரப்பூர் வழியாகச் செல்லும் 3மெயில் வண்டிகளில் ஒன்று தான் மொரப்பூரில் நிற்கும். நான் தஞ்சைக்கு டிக்கெட் எடுக்க புக்கிங் ஆபீசுக்கு அருகில் சென்றேன். அங்கே டிக்கெட் பெறாமல் திரும்பிய சிலர் என்னைப் பார்த்து ஐயா டிக்கெட் இல்லையாம் வீனே ஏன் போகின்றீர்கள்? என்று சொன்னார்கள். எனக்கு டிக்கெட் வாங்க வேண்டுமென்ற ஆத்திரம். அதனால் அவர்கள் வார்த்தையைக் கேளாமல் டிக்கெட் தரும் இடத்திற்கு சென்று தஞ்சைக்கு ஒரு முதல்வகுப்பு டிக்கெட் தரும் இடத்திற்குச் சென்று தஞ்சைக்கு ஒரு முதல் வகுப்பு டிக்கெட் கொடுக்குமாறு கேட்டேன். புக்கிங் கிளார்க்கு வண்டியில் இடமேயில்லை. எந்த வகுப்பிற்கும் டிக்கெட் கிடையாது என்று கூறி டிக்கெட் கொடுக்க மறுத்துவிட்டார். நான் டிக்கெட் வாங்காமல் திரும்பியதைக் கண்டு அவர்கள் சிரித்தார்கள். நான் ஸ்டே சன் மாஸ்டரிடம் போனேன். அவர் என்னைப் பார்த்துக் கைகூப்பி வணங்கி வாருங்கள் வாருங்கள் எங்கேபோகின்றீர்கள்? நான் தஞ்சைப் பெரிய கோயிலில் தங்கள் விரிவுரையைப் பல முறை கேட்டு ரசித்தவன் என்று கூறினார்.

நான் "தஞ்சைக்குப் போக வேண்டும் ஒரு முதல் வகுப்பு டிக்கெட் தருமாறு செய்யுங்கள்"' என்றேன். டிக்கெட் தருகின்றேன். இடம் கிடைப்பது தான் துர்லபம் என்று கூறி தஞ்சைக்கு முதல் வகுப்பு டிக்கெட் வாங்கித் தந்தார். நான் டிக்கெட்டை வாங்கிக்கொண்டு ஐயா டிக்கெட் கொடுத்தால் மட்டும் போதாது. என்னை ரயிலில் ஏற்றுவது தங்கள் பொறுப்பு" என்று கூறினேன். ரயில் வந்தது ஸ்டேசன் மாஸ்டர் அந்த நடுநிசியில் ரயிலில் முதலிலிருந்து கடைசி வரையிலும் முயற்சி செய்தார். எந்த வண்டியிலும் இடமில்லை. முடி வில் ஓர் முதல் வகுப்புப் பெட்டியைத் தட்டிக்கதவைத் திறக்கும்படிச் செய்தார். அதில் அமெரிக்க யுத்த வீரர்கள் இருந்தார்கள். அதில் என்னை ஏற்றமுயன்றார். பெட்டிக்குள் ஐந்தாறு நாய்கள் குரைத்தன. அதில் ஏற நான் அஞ்சினேன். அவர் சிவப்பு விளக்கைக் காட்டி ரயிலை ஐந்து நிமிடம் தாமதப்படுத்தி முடிவில் ரயில்வே கார்டு இருக்கும் பெட்டியில் என்னை ஏற்றினார். அந்த கார்டைப் பார்த்து சாமியார் எனக்குத் தெரிந்தவர். சேலம் வரைக்கும் பிரயாணம் செய்ய அனுமதி செய்யுங்கள் என்று கூறி விசில் ஊதினார்.ரயில் புறப்பட்டது

ரயில்வே கார்டு நாற்காலியில் இருந்து கொண்டு எழுதிக் கொண் டிருந்தார்.நான் பூசைப் பெட்டி, தோல் பெட்டி, கமண்டலம், புத்தகப்பை இவைகளை ஒருபுறம் வைத்துவிட்டு என்படுக்கை மேல் அமர்ந்து கண்களை மூடி தியானம் செய்து கொண்டி ருந்தேன். அது தை மாதமானபடியால் குளிர் அதிகமாக இருந்தது. சிமெண்டு கலர் போர்வையை போர்த்திக் கொண்டிருந்தேன்.

அந்த ரயில்வே கார்டுக்கு என்னைப் பிடிக்கவில்லை. அலட்சியமாகப் பார்த்து சிரித்துக்கொண்டே "ஐயா! உங்களுக்கெல்லாம் மூளை கிடையாது. முதல் வகுப்பு டிக்கெட் வாங்கிக் கொண்டு இடம் கிடைக்காமல் படுக்கைமேல் உட்கார்ந்துகொண்டு தூங்கி விழுந்து கொண்டு பிரயாணம் செய்கின்றீரே! (தொடரும்)


**மாபெரும் பங்குச்சந்தை பற்றிய கருத்தரங்கு**

வரையறுத்த HNB பங்கு தரகர் (தனியார்) நிறுவனமும் HNB வங்கியும் இணைந்து நடாத்தும்

திகதி :- October 01
காலம் :- 3.00 (பிற்பகல்)
இடம் :- யாழ்ப்பாணம் வணிகர் கழகம் மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

**வரவேற்புரை**
செ.வசந்தகுமார்
*(முதலீட்டு ஆலோசகர்/பங்குத்தரகர் HNB பங்குத்தரகர் நிறுவனம்)*

**நுகர்வோர் வங்கி சேவை**
பிரேமராஜா
*(சிரேஷ்ட முகாமையாளர் நுகர்வோர் வங்கிப்பிரிவு)*

**பங்குச்சந்தை பற்றிய அறிமுகம்**
சிவானி திருஞானசம்பந்தன்
*(முகாமையாளர் கொழும்பு பங்குச் சந்தை யாழ் கிளை)*

**முதலீட்டு தீர்மானங்களை எவ்வாறு மேற்கொள்வது?**
ஹசித்த பிரேமரட்னே
*(முகாமையாளர் ஆராய்ச்சி HNB பங்குதரகர் நிறுவனம்)*

**வினாநேரம்**

**நன்றியுரை**
விராச் மாலவென
*(உதவி முகாமையாளர் - வியாபார அபிவிருத்தி HNB பங்குத்தரகர் நிறுவனம்)*

(C/598)


## பிள்ளைகளை செயற்திறன்....

பயந்து சிலவேளையில் விளையாட்டு வீரர்களின் வீடுகளையும் தா[illegible] கக்கூடும். அதேபோல் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்களை எம்முடைய சமூகத்திற்கு மாசு ஏற்படுத்தும் பொழுது சமூகமோ தனிநபர்களே அந்த சமூகத்திற்கு உரியவர்களாக இருக்க விரும்பமாட்டார்கள். அத்து டன் உண்மையைப் புறம்தள்ளினால் ஆச்சரியப்பட வேண்டியதில்லை. முன்வைக்கப்பட்ட துஷ்பிரயோகத்தின் சமநிலை காரணமாக அதனை நியாயப்படுத்துவது சுலபம். அதேநேரம் மாசுபடுவதற்கு ஒரு விதத்தி[illegible] காரணமாயிருக்கும் இந்த மறுதலிப்பு இப்பிரச்சினையை மறைக்கப் பட்ட வினோதமான சம்பவம் ஆக்குவதற்கு பிரதானமான அம்சமாகிறது.

### எல்லா மட்டத்திலும் உள்ளவர்களால் பாலியல் துஷ்பிரயோகங்கள் மறுக்கப்படுதல்

சமூகத்தில் துஷ்பிரயோகங்களை மறுத்துரைப்பது மிகவும் சாதாரண விஷயம் அதிலும் வளர்முக நாடுகளில் இது விசேஷம். இது சிறுமட்டத் திலிருந்து உயர்மட்டம் வரை இருக்கும். பாதிக்கப்பட்டவர் பக்கமாக இந்த மாசு (கறையானது) சமூகம், குடும்பம் ஏன் பாதிக்கப்பட்டவர் கூட அப்படி நடக்கவில்லை எனக் கூறவைக்கும் அரசியல் ரீதியாகவும், பொரு ளாதார ரீதியாகவும் தீமை விளைவிக்கக் கூடுமென கருதி அரசாங்கள் கூட மறுதலிக்கின்றன. குற்றம்புரிபவர் பக்கத்திலும் சமூகத்தின் நுண் ணிய மற்றும் பாரியளவிலும் இதே அம்சங்கள் தான் நடக்கின்றது.

### சிறுவர் துஷ்பிரயோகத்தை இல்லாதொழிப்பதெப்படி?

பெற்றோர் பிள்ளைகளுடன் நெருங்கிய தொடர்பாடலை கொண்டி ருத்தல் தற்கால சூழலில் பெற்றோர் பிள்ளைகளுடன் நெருங்கிய தொடர்பாடலை கொண்டிருப்பதில்லை. காரணம் வறுமை காரணமாக கடின உழைப்பு அல்லது மனச்சோர்வு கவனித்காது விடல், விருப்ப மின்மை பெற்றோர் பிள்ளைகளுடன் எல்லா குடும்ப விடயங்களையும் கலந்தாலோசிக்க விருப்பமில்லை.

அல்லது அறியாமை அல்லது தேவையற்றது என உணர்தல்

### மதுபாவனையைத் தவிர்த்தல்

பலதார திருமணங்களை ஆதரிக்காது விடல் போன்ற அடிப்படை அம்சங்களை தவிர்த்து கொள்வதன் மூலம் குடும்பத்தை நல்ல சமூ[illegible] அலகாக உருவாக்கமுடியும். குடும்ப சூழலைப் பாதுகாப்பதன் மூலமே சிறுவர் உரிமைகளைப் பாதுகாக்கமுடியும். பெற்றோருடன் பிள்ளைகள் வாழ்வதே சிறுவர் நலனைப் பாதுகாக்க உதவும்.

### செயற்றிறன் கொண்ட சிறுவர்களாக வளர்த்தல்

திறன்சார் நடவடிக்கைகளுக்கு பிள்ளைகளை ஊக்குவித்தல் கல்வி சார் நடவடிக்கைகளுக்கு மட்டும் ஆட்படுத்துதல் சிறுவர் மேம்பாட்டிற்கு போதுமானதல்ல. ஓய்வு பொழுதுபோக்கு மற்றும் தொழில்சார் கல்வி இவையாவும் முக்கியமானவை. என்ற நிலைப்பாடு தோற்றுவிக்கப்பட வேண்டும்.

குடும்பத்தின் எல்லா செயற்பாடுகளிலும் பிள்ளைகளை பங்கு கொள்ளச் செய்தல் அவசியமானதாகும். பொருளாதார நிலை மற்றும் எதிர்காலத் திட்டங்கள் யாவும் பிள் ளைகளுடன் கலந்துரையாடப்படுதல் ஆரோக்கியமானதாகலாம்.


எஸ்.ஸ்ரீபன்
யாழ்.மாவட்ட சிறுவர் பாதுகாப்புக்குழு


### ஓய்வும் பொழுதுபோக்கும் அமையக் கூடியவாறு செயற்படல்

கிராமிய மற்றும் பிரதேச மட்டத்தில் சிறுவர்பூங்காக்கள் மற்றும் விளையாட்டுப் போட்டிகள் என்பவற்றை முன்னெடுத்து செயற்படுத்து வதன் மூலம் பிள்ளைகளை பங்களிப்பு முறைக்கு மாற்றமுடியும். ஏனெ னில் பரம்பரை இயல்புகளைவிட சூழல் காரணிகள் ஒரு மனிதனின் ஆளுமையில் பாரிய தாக்கத்தை செலுத்துகின்றது. ஆகவே நல்ல புற சூழலை உருவாக்குவதன் மூலம் நல்ல பிரஜைகளை உருவாக்க முடி யும்.

*நீங்கள் அறிந்த சிறுவர் துஷ்பிரயோகம் பற்றி எமக்கு அறிவியுங்கள்.*


**உங்கள் தொடர்புக்கான எங்கள் முகவரி:**
**மாவட்ட சிறுவர் பாதுகாப்புக்குழு,**
**அறை எண் 30,**
**யாழ் போதனாவைத்தியசாலை,**
**யாழ்ப்பாணம் தொ.பே:-222 5657**
**மின்னஞ்சல் dcpc jaffna@yahoo.com**
**இணையம்:- www.pillaii.com**

சர்வதேச மட்ட பளுதூக்கும் போட்டிகளில்

# இந்தியாவிற்கு பேரவமானம்


# 3 வீராங்கனைகளுக்கு ஆயுள்தடை

ஊக்கமருந்து சோதனையில் சிக்கிய இந்திய பளுதூக்கும் வீராங்கனைகளான பிரதிமா குமாரி, சானமாச்சா, சானு சனைனா ஆகியோருக்கு ஆயுள்கால தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்திய ஒலிம்பிக் சங்கத தலைவர் சுரேஷ் கல்மாதி இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

இவர்களுக்கு இரு நபர் கமிட்டியின் அறிக்கையின் பேரில் ஆயுள்காலத் தடை விதிக்கப் பட்டுள்ளது. ஊக்க மருந்து பயன்படுத்தி சர்வதேச அளவில நாட்டுக்கு அவமானம் தேடித் தந்ததால் இந்த அதிகபட்ச நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாககல் மாதி தெரிவித்தார்.

மேலும் பயிற்சியாளர் பால் சிங் சந்துவுக்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளது. எதென்ஸ் ஒலிம்பிக் போட்டிக்குப் பிறகு சந்துவம் பெலாரஸைச் சேர்ந்தபயிற சியாளர் லியோனட் தாராஜென்கோவும் பதவி நீக்கப்பட்டனர். லியோனிட் பயிற்சியாளராக நியமிக்கப்பட மாட்டார். ஒலிம்பிக் போட்டிகளுக்கு முன்னர் ஊக்கமருந்துப் பரிசோதனையில் பிரதிமா சிக்கிக கொண்டார். கடந்த மாதத்தில் எதென்ஸ் ஒலிமபிக்கின்போது தடைசெய்யப் பட்டிருந்த மருந்தை உட்கொட்டிருந்ததாக சானுசிக்கினார். கடந்த ஏப்ரல் மாதத்தில் கஜகஜஸ்தானின் அல்மாதியில் நடைபெற்ற ஆசிய சம்பியன்ஷிப் போட்டிகளின் போது ஊக்கமருந்து சோதனையில் பிடிபட்டார் சுனைனா. ஊக்க மருந்து பயன்படுத்துபவர்களுக்கு ஓர் எச்சரிக்கையாக இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. இது குறித்து பளுதூககும் வீராங்கனை சானு கருத்துத் தெரிவித்தபோது நான் எந்த ஊக்கமருந்தையும் உட்கொள்ளவில்லை. ஊக்கமருந்து சோதனையில் பிடிபட்டவர்களுக்குத தடை என்றால் முன்னதாக பிடிபட்ட குஞ்சராணிதேவி, சதீதா ராய், சைலஜா ஆகியோருக்கும் ஆயுள்தடை விதிக்கவேணடும் என கூறியுள்ள அதிகாரிகள் இரட்டை நிலையைக்கடைப்பிடிப்பதாக குற்றம்சாட்டியுள்ளார். (ப)



இரண்டாவது சம்பியன் அணிகளுக்கான விளையாட்டுப் போட்டியில் மான்செஸ்ரர் அணி 6-2என்ற கோல் கணக்கில் பெனர்பாஹி அணியை வெற்றி கொண்டது.

# ஆஸி.அணியுடனான முதல் டெஸ்டுக்கு தயாராகிவிடுவேன் என்கிறார் சச்சின்

காயம் குணமடைவதில் பெருமளவு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகவும் அவுஸ்திரேலிய



அணியுடனான முதல் டெஸ்ட் ஆட்டத்துக்குத் தயாராகிவிடுவேன எனவும் இந்திய அணியின் நட்சத்திர வீரர் சச்சின்டெண்டுல்கா தெரிவித்தார்.

இடது முழங்கை காயம காரணமாக 6 வாரமாக சிகிச்சை பெற்று வரும் டெண்டுல்கர் மும்பையில் நிருபர்களிடம் கூறிய தாவது.

பெங்களூரில் அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் பங்கேற்பதிலிருந்து நானாக விலகமாட்டேன். எனினும் டாக்டர்களின் முடிவுக்காகக் காத்திருக்கிறேன்.

தற்போது மிக நன்றாக இருக்கிறேன். சிகிச்சையில் மிகப் பெரிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. காயம் ஏற்பட்டுள்ள இடத்தில் போதிய வலு இல்லாமலிருப்பதை உணர்கிறேன். ஆறு வராமாக பயிற்சி செய்யாமல் இருந்தேன். கொஞ்சம் கொஞ்சமாக வலுப்படுத்த வேண்டும். தற்போது ஆரம்பத்தில் எடை குறைந்த மட்டைகளைப் பயன்படுத்தி பயிற்சி செய்ய திட்டமிட்டுள்ளேன். எவ்வளவு பயிற்சி பெறமுடியுமோ. அந்த அளவு பெறத் திட்டமிட்டுள்ளேன். எனினும் சூழலும் அதற்கு அனுமதிக்க வேண்டும் என்றார். (ப)



எதென்ஸில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் லிவப்பூல் அணி எதிர்பாராத விதமாக 1-0என்ற கோல் கணக்கில் கிரீக் அணியிடம் தோல்வியடைந்தது.

தாய்லாந்து ஓபன் டெனிஸ் போட்டி

# இரண்டாவது சுற்றில் பெடரர், பெக்கர் மோதுகின்றனர்

பாஙகொக் தாய்லாந்தில் ஓபன் டென்னிஸ் போட்டியில் சுவிட்சர்லாநதின் ரோஜர் பெடரர் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

தாய்லாந்தில் உள்ள பாஙகொக நகரில் முன்னணி டென்னிஸ் வீரர்கள் பங்கேற்கும் தாய ஓபன் டென்னிஸ் போடடி நடக்கிறது. ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்று முன்தினம் நடந்த முதல் சுற்றுப் போட்டியில் உலகின் பிரபல ஓபன் டெண்ணிஸ் வீரரான பெடரர், பிரானசின் நிக்கோலஸ் தோமனை எதிர்த்து விளையாடினார்.

விறுவிறுப்பாக நடந்த இப் போட்டியில் பெடரர் 6-4,7-6, (7/4) என்ற நேர்செட்களில் வெற்றிபெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார்.

மறறொரு போட்டியில் சுவிட்சர்லாந்தின் இவோ ஹுபெக்கர் 6-4,6-1என்ற செட்களில் ஹங்கேரியின அட்டிலா சவோ டை வீழ்த்தினார். இரண்டாவது சுற்றில் இவர் பெடரரை சந்திக் கிறார்.

# உதைபந்தாட்ட இறுதி சுற்றுப்போட்டி இன்று

(சாவகச்சேரி)

தென்மராட்சிக் கல்விவலய பாடசாலைகளிற்கிடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டிகள் இன்று யாழ்/கொடிகாமம் அரசினா வித்தியாசாலை இராசா விளையாட்டு மைதானத்தில பி.ப.1.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இறுதிப் போட்டியில் பங்கு பற்றும் பாடசாலைகளின் விபரம் வருமாறு.

**12 வயதுப் பிரிவு**

சாவகச்சேரி இந்துக்கல்லூரி எதிர் மீசாலை வீரசிங்கம் வித்தியாலயம்.

**14வயதுப் பிரிவு**

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி எதிர் வரணி மகாவித்தியாலயம்.

**16வயதுப் பிரிவு**

நாவற்குழி ம.வித்தியாலயம் எதிர் மீசாலை வீரசிங்கம் வித்தியாலயம்.

**18வயதுப் பிரிவு**

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி எதிர் சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

(க-47)

# 48வது தேசிய ஹொக்கிப் போட்டி

இலங்கை ஹொக்கிச் சம்மேளனத்தினால் ஒழுங்கமைக்கபபட்டு மாத்தளை ஹொக்கிச சங்கத்தினால் நடாத்தப்படவுள்ள 48வது சிரேஷ்ட தேசிய ஹொக்கிச் சுற்றுப்போட்டி இன்று தொடக்கம் எதிர்வரும் 3ஆம் திகதிவரை மாத்தளையில் நடைபெறவுள்ளது.

இவ் சுற்றுப் போட்டியிலே கலந்துகொள்வதற்கு யாழ். அணி நேற்று புறப்பட்டுள்ளது.

# விளையாட்டு செய்திகள்

# ஆசிய ஜூனியர் கால்பந்தாட்டம் இந்திய அணி வெளியேற்றம்


ஆசிய ஜூனியர் கால்பந்து போடடியில் உஸ்பெஸ்கிஸ்தானிடம் தோல்வி அடைந்த இந்திய அணி தொடரிலிருந்து வெளியேறியது.

19வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய ஜூனியர் கால்பந்து போட்டி மலேசியாவில் நடந்து வருகிறது. நேற்று முன்தினம் நடந்த இரண்டாவது லீக் சுற்றுப்போட்டியில் குரூப் சி பிரிவில் இடம்பெற்றுள்ள இந்திய அணி, உஸ்பெஸ்கிஸ்தானை எதிர்த்து விளையாடியது.

ஆட்டத்தின் 28வது நிமிடத்தில் உஸ்பெஸ்கிஸ்தானின அலெக்சாண்டர் கெல்ஸ்டோவ் கோல அடித்து அணிக்கு முன்னிலை பெற்றுத்தந்தார். அடுத்ததாக 67வது நிமிடத்தில் இந்திய வீரர் மன்ஜித்ஜிங் கோல் அடித்தார்.

இறுதியில் 90நிமிடங்களின முடிவில் இரு அணிகளும் 1-1 என்ற கோல்கணக்கில் சம நிலையில் இருந்தன.

இதனால் 15நிமிட கூடுதல் நேரம் வழங்கபபட்டது. இதில் சத்திரிதின் அப்துல் கோல் அடிக்க, உஸ்பெஸ்கிஸ்தான் 2-1 என்ற கோல் கணக்கில் இந்திய அணியை வென்றது. முன்னதாக முதல் லீக் போட்டியில் இந்திய அணி 1-2என்ற கோல் கணக்கில் சிரியாவிடம் தோல்வி அடைந்தது. இதன் மூலம் இந்திய அணி தொடரிலிருந்து வெளியேறியது. உஸ்பெஸ்கிஸ்தான், சிரிய அணிகள் காலிறுதிக்குத் தகுதி பெற்றன.



ஜப்பானைச் சேர்ந்த 8வது கறுப்புப்பட்டி போதனாசிரியரான சென்சி மசோகவாசோவின் சர்வதேச தொடர்பாளர் சென்சி சிமிற்றினால் (6வது கறுப்புப்பட்டி) கிளிநொச்சியில் கராத்தே பயிற்சிப் பாசறையொன்று நடாத்தப்படுகிறது.

நேற்று முன்தினம் ஆரம்பமான இப்பாசறையில் தமிழீழத்தின் 8 மாவட்டங்களையும் சேர்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீரவராங்கனைகள் கலந்து கொண்டுள்ளனர்.

இப்பயிற்சி நெறி தமிழீழ விளையாட்டுத்துறையினரின் ஏற்பாட்டில் நடாத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஆரம்ப நிகழ்வில் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை அவர்கள் தேசியக்கொடியை ஏற்றிவைப்பதையும் சென்சி சிமித் அவர்கள் பயிற்சிகளை வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# விடுதலைப் புலிகளின் உயர் மட்டக் குழுவினருக்கு ஜெனீவா விமான நிலையத்தில் பெருவரவேற்பு



(ஜெனீவா)

தடைப்பட்டுள்ள சமாதான நட வடிக்கைகளை மீளவும் ஆரம்பிப்பது குறித்து தமது அரசியல் விவகாரக் குழுவுடன் விரிவாக ஆராய்வதற்காக நேற்று முன்தினம் காலை சுவீஸுக்குப் பயணமாகிய விடுதலைப் புலிகளின் உயர் மட்டக் குழுவினர் அன்றைய தினம் இரவு 10.00 மணிக்கு ஜெனீவா விமான நிலையத்தைச் சென்றடைந்தனர்.

சுவிஸ் பயணமான விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் ப. நடேசன், நீதி நிர்வாகப் பொறுப்பாளர் பரா, மட்டு - அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி. கௌசல்யன், சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன், சமாதான செயலக மகளிர் பிரிவுத் துணைப் பொறுப்பாளர் மற்றும் புலிகளின் குரல் பொறுப்பாளர் தமிழன்பன் ஆகியோர் உள்ளடங்கிய மேற்படி உயர் மட்டக் குழுவினருக்கு ஜெனிவா விமான நிலையத்தில் பெரு வரவேற்பு வழங்கப்பட்டது. விமான நிலையத்தில் திரண்டிருந்த புலம்பெயர் சுவிஸ் வாழ் தமிழீழ மக்கள் கைகளில் தமிழீழ தேசியக் கொடிகளையும் மலர்ச் செண்டுகளையும் தாங்கியவாறு விடுதலைப்புலிகளின் உயர் மட்டக் குழுவினரை பெரு மகிழ்வுடனும், எழுச்சியுடனும் வரவேற்றனர்.

இன்று விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் சில முக்கிய சந்திப்புகளை நடத்த ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் இன்று முக்கிய கூட்டங்களும் ஆரம்பமாகின்றன. நாளை சனிக்கிழமை தமிழீழ விடுதலைப் போராட்டம் தொடர்பாக எழுதப்பட்ட ஆங்கில நூல் ஒன்றும் அங்கு வெளியிடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ற)


## சிறு விளம்பரம்

### தவறி விட்டது

சாவல்கட்டு ஆனைக்கோட்டையைச் சேர்ந்த பரமநாதன் முனீஸ்வரன் என்பவரின் மோட்டார் சைக்கிள் வரிப்பத்திரம், காப்புறுதிப்பத்திரம் (NP-HR-2068) என்பன தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற் குறிப்பிட்ட விலாசத்தில் ஒப்படைத்து உதவவும. சனமானம் வழங்கப்படும்.

(8853)

முகமாலையிலிருந்து வரும் போது செல்வராசா சபேசன் அரசடி குறுக்குறோட் கரவெட்டி மத்தி (இல 2071791) எனும் பாஸ்போட் தவறிவிட்டது.

கண்டெடுத்தவர்கள் "நெலலியடி றீகல் வையின் ஸ்ரோஸில்" ஒப்படைத்தால் சன்மானம் வழங்கப்படும்.

(C/597)


# சந்திரா பெர்னாண்டோ இன்று புதிய பொலிஸ்மா அதிபராக பதவியேற்கிறார்

(கொழும்பு)

புதிய பொலிஸ்மா அதிபராக சந்திரா பெர்னாண்டோ இன்று உத்தியோகபூர்வமாகப் பதவியேற்கவுள்ளார்.

பொலிஸ்மா அதிபர் இந்திரா டி சில்வாவின் பதவிக்காலம் நேற்றுடன் முடிவடைந்துள்ளதால் புதிய பொலிஸ்மா அதிபராக சந்திரா பெர்னாண்டோ ஜனாதிபதியின் சிபார்சிற்கு அமைய இன்று பதவியேற்கவுள்ளார்.

28 ஆவது பொலிஸ்மா அதிபராக சந்திரா பெர்னாண்டோ பதவியேற்கும் வைபவம் இன்று பொலிஸ் தலைமையகத்தில் நடைபெறவுள்ளது.

பம்பலப்பிட்டி புனித பேதுரு மற்றும் பிறஸ்ரன் வித்தியாலயத்தின் பழைய மாணவரான இவர் ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைகழகத்தின் பட்டதாரியாவார்.

1971 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 15 ஆம் திகதி இலங்கைப் பொலிஸ் சேவையில் இணைந்து கொண்ட இவர் 1991 ஆம் ஆண்டு பிரதிப் பொலிஸ்மா அதிபராக பதவி உயர்வு பெற்றார்.

2003 ஆம் ஆண்டு பதில் பொலிஸ்மா அதிபராக கடமையாற்றிய இவர் இன்று இலங்கையின் 28 ஆவது பொலிஸ்மா அதிபராக பதவியேற்கின்றார். (க-61)

## யாழ்ப்பாணக் குடாநாட்டில்



# இயல்பு நிலையை ஏற்படுத்துவற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றோம்

## இராணுவ கட்டளை தளபதி சுனில் தென்னக்கோன்

**யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள யாழ்ப்பாணக் குடாநாட்டில் சமாதானத்தையும் இயல்பு நிலையையும் ஏற்படுத்துவதற்காக பாதுகாப்புப் படையினர் ஆகிய நாம் இதயபூர்வமாகப் பணியாற்றிவருகின்றோம். அத்துடன் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் உதவிகள் செய்யவும், சேவைகள் ஆற்றவும் நாம் எம்மை தயாராகிக் கொண்டுள்ளோம்.**

இவ்வாறு யாழ்ப்பாண மாவட்டத்துக்கான படைத் தளபதியான மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் நேற்றைய தினம் யாழ்ப்பாணம் ஆயர் இல்லத்தில் இடம்பெற்ற சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான மக்கள் குழுவின் கூட்டத்தில் பங்குகொண்டு உரையாற்றும் போது தெரிவித்தார்.

மேற்படி அமைப்பின் தலைவர் டீ.ஆர். அருமைநாயகம் தலைமையில் நடைபெற்ற இச்சந்திப்பில் யாழ். மறை மாவட்டக் கத்தோலிக்க ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம், நீதிக்கும் சமாதானத்துக்குமான ஆணைக்குழுவின் தலைவர் வணபிதா ஏ.ஈ பேர்னாட், கியூடெக் நிறுவனத்தின் பணிப்பாளர் வணபிதா சீஜீ. ஜெயக்குமார், மக்கள் குழுவின் இணைச் செயலாளர்கள் சு. பரமநாதன், வணபிதா ஜேபி.ஈ.



செல்வராஜா பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு. மோகனதாஸ் டாக்டர் வீ.தியாகராஜா ஆகியோரும் பாதுகாப்புப்படை தரப்பில் லெப்.கேணல் ஈ. டபிள்யூ பி. சில்வா, யாழ். நகர கமாண்டர் மேஜர் பீ.எஸ்.எஸ்.ஆர். உதயகீர, சிவில் பீடத்தைச் சேர்ந்த மேஜர் லொறி அஸ்வத்த, 51 ஆவது படையணியைச் சேர்ந்த யூ.பி.எல் பெர்ணாண்டோ, உதவி பொலிஸ் அத்தியட்சகர் தயா செனவிரத்தின ஆகியோர் பங்குகொண்டிருந்தனர்.

இச்சந்திப்பின் போது யாழ். மாவட்டத்தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் தொடர்ந்து குறிப்பிடும்போது.

நான் யாழ்ப்பாணத்தில் ஏற்கனவே பணியாற்றியுள்ளேன். எனவே யாழ்ப்பாணம் எனக்குப் புதியதல்ல. இங்குள்ள நிலை மைகள் பிரச்சினைகள் குறித்து நான் நன்கு அறிவேன். கடந்த காலங்களில் இரண்டு பக்கங்களிலும் தவறுகள் இடம்பெற்றுள்ளன. அத்தகைய தவறுகளில் இருந்து நாம் பாடங்களைப் படித்துள்ளோம். அத்தகைய தவறுகளை மீண்டும் இடம்பெற அனுமதியாமல் இருப்போம்.

அத்துடன் இங்குள்ள நிலைமைகளில் ஆரோக்கியமான மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு நாம் படிப்படியாக முயற்சிப்போம் யாழ்ப்பாணக் குடாநாட்டில் சட்டமும் ஒழுங்கும் நிலையில் மாற்றம் ஏற்பட்டு வருகின்றது. அதனை மேலும் மேம்படுத்த நாம் எல்லோரும் இணைந்து செயல்பட வேண்டும். இங்கு மனித உரிமைகள் மீறல் சம்பவங்கள் குறித்து நான் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் கலந்தாலோசித்துள்ளேன் எனத் தெரிவித்துடன் ஏ-9 பாதையை காலை 6 மணி முதல் இரவு 7 மணிவரையும் திறந்து பொதுமக்களுக்கு உதவுவது தொடர்பாக நான் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினருடன் ஆலோசனை செய்துள்ளேன். இதற்கு அவர்களும் சம்மதம் தெரிவித்துள்ளனர். இது குறித்து நல்லதோர் முடிவு மிக விரைவில் தெரிவிக்கப்படும் என்று குறிப்பிட்டார்.

இக் கூட்டத்தில் பாதுகாப்புப் படையினரால் பயன்படுத்தப்படும் வீடுகளுக்கான வாடகைப் பணம் வழங்கல், அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் இடம்பெயர்ந்த குடும்பங்களை மீளக் குடியமர்த்தல், மண்டைதீவில் மீள் குடியமர்வுத் திட்டம், மின்சார நிலைய வீதி பொதுமக்கள் பாவனைக்கு அனுமதித்தல், வீதிப் போக்குவரத்தும் விபத்துக்களும் படைதரப்பும் பொதுமக்கள் தரப்பும் உறவுகள் மேம்படுத்தல் உள்ளிட்ட பல விடயங்கள் விரிவாகக் கலந்துரையாடப்பட்டன என மக்கள் குழுவின் தலைவர் டீ. ஆர் அருமைநாயகம் தெரிவித்தார்.

(ப-16)

## தமிழ்மொழியும் இலக்கியமும்...

**03) பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்கு விடை தருக**

அ) இளையான் குடிமாறநாயனார் அடியாரை உபசரித்த முறையின் சிறப்பு

ஆ) இருட்டறை சிறுகதை ஊடாக எடுத்துக் காட்டப்படும் படிப்பினைகள்

இ) காவியத் தலைவி கதீஜாநாயகியின் சிறப்பியல்புகள்

**04) பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்கு விடை தருக?**

அ) உவமை நயத்தில் திரு.அ.ச. ஞானசம்பந்தர் கம்பராமாயணக் கதைப் பரப்பிலிருந்து காட்டும் உவமைகள

ஆ) கவிதை உள்ளத்தில் எம்.ஏ.நு.்.மான் அவர்கள் சமுதாயத்திற்கு கூறும் வழிகாட்டற் கருத்துக்கள்

இ) கடலை நம்பி என்ற பாடப்பகுதியில் எடுத்துக் காட்டப் படும் மீனவரின் துயரங்கள்?

**5,6,7 ஆகிய வினாக்களுள் ஏதேனும் ஒரு வினாவுக்கு மட்டும் விடை தருக?**

05) அரிச்சந்திரபுராணத்தில் சந்திரமதி படும் துயரத்தை கவிஞர் எடுத்துரைக்கும் வகையிலுள்ள சிறப்புக்களை விளக்குக?

06) அ) அந்தோக் கிழவியின் துயரநிலைக்கான காரணம் யாது?

ஆ) அவள் தனது மனதை ஆறுதல்படுத்த யாது செய்தார்?

இ) தேவகிருபையை முன்னிட்டு வாழும்.... எனும் கதைப்பகுதியினூடாக கூறப்படும் கிராமிய வாழ்க்கை முறைகளை எடுத்துக் காட்டுக.

07) அ) வள்ளுவரின் கருத்தைப் பாரதியார் எடுத்தாளும் இரண்டு சந்தர்ப்பங்களை எடுத்துக் காட்டி விளக்குக?

ஆ) திருமணிமாலை நமுறூது அழிவுண்ட படலத்தில் நமுறூது வன் படைகளின் போர்க்கோலக்காட்சியை எடுத்துக் காட்டுக?

### பகுதி 1 திருத்தம்

30. செய்கின்ற என்னும் வாய்ப்பாட்டு பெயர் எச்சங்கள் எக்காலத்திற்குரியன.

1. இறந்தகாலம் 2.நிகழ்காலம் 3.வினை எச்சம் 4.(முக்காலம்

## முகிழ்நிலை ஆசிரியர் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் உள்ளகப் பயிற்சி முகிழ்நிலை ஆசிரியர்களுக்கான கூட்டம் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரியில் நடைபெறும். அன்றைய தினம் அவர்களுக்கான சம்பளக் கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

எனவே அனைத்து உள்ளகப் பயிற்சி ஆசிரியர்களும் இக் கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு பீடாதிபதி தி. கமலநாதன் அறிவித்துள்ளார். (இ)

## செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

புதிதாக நியமனம் பெற்று இதுவரை பாடசாலை நடைமுறை தொடர்பான பயிற்சி எதுவும் பெறாத ஆசிரியர்களுக்கான செயலமர்வு இன்றும் நாளை சனிக்கிழமையும் காலை 8.30 மணி முதல் வரணி ஆசிரியர் மத்திய நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

எனவே இவ் வருட ஜனவரி மாதம் முதலாம் திகதிக்குப் பின் நியமனம் பெற்ற அனைவரையும் இச் செயலமர்வில் பங்குபற்றுமாறு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார். (க-33-47)

## மாதாந்த இசை நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் திருஞான சம்பந்தர் ஆதீனத்தின் மாதாந்த இசை நிகழ்ச்சி இன்று மாலை 5 மணிக்கு ஆதீனத்தில் இடம்பெறவுள்ளது.

செஞ்சொற் செல்வன் ஆறு. திருமுருகன் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் யாழ். கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

(ற-121)

# தில்லைச் சிற்றம்பலமேய செல்வன் கழலேத்த அனைத்தும் சித்தியாகும்

## வெள்ளிநற்சிந்தனை

**சிவ சண்முகவடிவேல்**

உலகத்தில் செல்வங்கள் பல. ஒரு செல்வம் மற்றும் ஓர் செல்வத திற்கு குறைவு உடையதலல. அவை யாவும் செல்வத்தை விரும்



புகினறவனுடைய தேவையையும மனப் பக்குவத்தையும் ஆசையை யும் பொறுத்திருக்கின்றது. பத்துப் பிள்ளைகளைப் பெற்ற ஒருவன் பெற்ற பிள்ளைகளைப் பராமரிக்க வழியறியாது பரிதவிக்கி ன்றான், அவனிடத்தில் பிள்ளைச் செல்வம் என்று பேசினால் கெள் ளையாக கோபவம் வரும். ஆனால் பண வசதி படைத்த ஒருவன் தனக்கு ஒரு மக்கட் செல்வம் இல்லையே என்று மதிமயங் குகின்றான் எல்லோருடைய ஆலோச னையாலும் அல்லும் பகலும் புத்தி குழம்பு கிறான். அதனால் எது செல்வம் எது செல்வ மின்மை என்பது அவரவர் அத்தியா வசியத தில் அடங்கும.

உலகவர் பொதுவாக, அருள், பொருள்,மக்கள், கல்வி, பூமி, நோயற்ற வாழவு குறைவற்ற செல்வும் என்று செல் வத்தோடு சேர்த்துப பார்பபார கள்.

திருஞானசம்பந்த மூர்த்தி நாய னார், செல்வர் வாழ் தில்லைச் சிற்றம பலமேய செல்வன் கழலேததுஞ் செல்வந் செல்வமே என்று செல்வத திற்கு அழுத்தம் கொடுத்துச் செப் பினார். உணர்வரிய மெய்ஞ்ஞா னம் உணரப் பெற்றவராதலின் அவ வாறு ஆற்றுப்படுத்தினார். 'அம்மா பிச்சை' என்று வாயிற்படியில் கை நீட்டுபவனிடத்தில் பிள்ளையார் வாக கைப் பேசினால் எப்படி இருக்கும்?

அதனால் செல்வம், வாழும் சூழலையும் மனப்பக்குவத்தை யும் திருப்திப்படுத்துவதாகும். இருந்தாலும் செல்வன் கழலேத்த அடைய முடியாத செல்வங்கள் வந்து சித்திக்கும். அதல ... டைய பிள்ளையார் கோயில் திருபப திகத் தேவாரங்களில் சுட்டிக் காட்டுகின்றார். மறப்பிலார் கணடீர் மைய நீரவாரே- 'இறைவன் கழலேத் து மின்ப மின்பமே.' 'தலையால் வண ங்குவார் தலையானார்களே' 'ஏத் துவார் தீரா நோயெல்லாம் தீரத றிண் ணமே', 'மாணா நோயெல்லாம் வாளாமாயுமே' இவ்வாறு செல்வம் பெறுதல் ஒருபுறமிருக்க, சிறமப லததை ஏத்தச் சொன்ன தமிழ் மாலை கோலததார் பாடவல்லார் நல்லாராவார்.

## நினைவுக்கல் திரை நீக்கம்

(யாழ்ப்பாணம்)

கடந்த 28.09.1996 அன்று சத் ஜெய 3 இராணுவ நடவடிக்கை யின் போது வீரச்சாவடைந்த 2ஆம் லெப். வேலனின் (சிவபாதம் சிறீஸ் கந்தராசா) நினைவுக் கல் கடந்த செவ்வாய்க்கிழமை கோப் பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் திரை நீக்கம் செய்யப்பட்டது. அவரது திருவுருவப்படம் அள வெட்டி மகாஜன சபை மண்டபத் தில் வைக்கப்பட்டு வீரவணக்கக் கூட்டம் இடம்பெற்றது.

பின்னர் அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு பிற்பகல் 5 மணிக்கு நினைவுக்கல் திரை நீக்கம் செய் யப்பட்டது. (ச)

## ஆன்மீகச சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

இந்த சமய விவகார அலுவல் கள் திணைக்களத்தின் யாழ். மாவட்ட அலுவலகம் நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் பி.ப 6.30 மணிக்கு நடாத்திவரும் ஆன் மீகச் சொற்பொழிவில் இன்று 'ஆறுமுகம ஆன பொருள்' எனும் விடயம் பற்றி சிவஸ்ரீ அருணா சலம் வாசுதேவன் சிறப்புச் சொற் பொழிவாற்றவுள்ளார். (ற)

## மாணவனைத் தாக்கிய பிக்கு பொலிஸாரால கைது

(புத்தளம்)

பாடசாலை மாணவன் ஒருவ னைத் தாக்கிய பிக்கு ஒருவரை புத்தளம் பொலிஸார் கைது செய்துளளனர்.

பாலாவி சிங்களப் பாடசாலை யில் கல்வி பயிலும் 13 வயது மாண வன் ஒருவனை கடந்த திங்கட் கிழமை பிக்கு உட்பட மூன்று ஆசிரி யர்கள் இணைந்து கடுமையாக தாக்கியுள்ளனர். இதனையடுத்து பிரஸ்தாபச் சிறுவனால் புத்தளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இம் முறைப்பாட்டை ஏற்றுக் கொண்ட பொலிஸார் நேற்று முன் தினம் சம்பந்தப்பட்ட பிக்குவை கைது செய்துள்ளனர். (ச-15)

## நீதிமன்றில் ஆஜர்

(யாழ்ப்பாணம்)

இணுவில் பகுதியில் வைத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இளம் குடும்பஸ்தர் நேற்று முன் தினம் யாழ். நீதிமன்றில் நீதிபதி ஆர். ரி. விக்னராஜா முன்னிலை யில ஆஜர் செய்யப்பட்டார்.

இரத்தின சிங்கம் சந்திரகுமார (வயது 23)என்பவரே பொலிஸா ரால் கைது செய்யப்பட்டவராவார்.

பிரஸ்தாப குடும்பஸ்தர் மீது 23 வழக்குகள் பதிவு செயயப்பட்டிருப் ப தாகவும் 7 வழக்குகளில் பிடி விறாந்து பிறப்பிக்கப்பட்டிருப் பதா கவும் பொலிஸ் தகவல்கள் தெரி விக்கின்றன.

இவ் வழக்குகளில் ஒரு வழக குத் தொடர்பாகவே பிரஸதாப நபர் நேற்று நீதிமன்றில் கைது செய்யப் படடு ஆஜர் செய்யப்பட்டார்.

பிரஸ்தாப குடும்பஸ்தரைப் பார்வையிடச் சென்ற சமயமே யாழ். மனிதவுரிமை ஆணைக்குழு இணைப்பதிகாரி றுவான் சநதிரசேகர தாக்கபபட்டமை என்பது குறிப் பிடததக்கது. (த)

## மீட்கப்பட்ட கண்ணிவெடிகள் அழிப்பு

(பொலிகண்டி)

டெனிஸ் கண்ணி வெடியகற் றும் பிரிவினரால் புன்னாலைக் கட் டுவனில் மீட்கப்பட்ட கண்ணி வெடி கள் கடந்த செவ்வாய்க்கிழமை வெடிக்க வைக்கப்பட்டன.

இவை குப்பிளானில் அமைந் துள்ள ஆயுதம் ஒழிப்புக் கிடஙகில வைத்து வெடிக்க வைக்கப்பட்டன.

சுமார் 270 கண்ணிவெடிகள் மீட கப்பட்டு இங்கு வெடிக்க வைக்கப பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-106)

## விளையாட்டுப் போட்டி

(கவ்வயல்)

அரியாலை சனசமூக நிலைய பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டு போட்டி எதிர்வரும் 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிப 2.00 மணிக்கு சனசமூக நிலைய விளையாட்டு மைதானத்தில் நிலை யதத தலைவர் தலைமையில் நடைபெறவுள்ளது. (ற-36)

# தனியார் துறையில் பணிபுரியும் பட்டதாரிகளை அரசதுறையில் உள்ளீர்க்க நடவடிக்கை

(கொழும்பு)

தனியார் துறையில் பணிபுரியும் பட்டதாரிகளும் அரசதுறையில் இணைந்து சேவையாற்ற விரும்பு கின்றனர். இதனால் இவர்களுக்கும் அரசதுறையில் வேலை வாய்ப்பை பெற்றுக் கொடுக்கவேண்டிய சூழ் நிலை உருவாகியிருப்பதாக பிரத மர் மஹிந்த ராஜபக்ஸ தெரிவித் துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற உயர் தேசிய கணக் கியல் நிறுவகத்தின் 61வது ஆண்டு நிறைவு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரை யாற்றுகையில்,

ஐக்கிய மக்கள் சுதந்திர முன் னணி அரசாங்கம் சுமார் 47 ஆயிரம பட்டதாரிகளுக்கு அரசதுறையில் வேலைவாய்பை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது.

நாடளாவிய ரீதியில் வேலை வாய்ப்பற்றிருக்கும் பட்டதாரிகளை இரு தொகுதிகளாக பட்டியல் மூலம் தெரிவு செய்து முதல் கட்டமாக தெரிவு செய்யப்பட்ட ஒரு தொகுதிப பட்டதாரிகளுக்கு பயிற்சி வழங்கி வருகின்றது.

இரண்டாவது தொகுதிபட்ட தாரிகளுக்கு இம்மாத நடுப்பகுதி யில் பயிற்சிகளை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த நிலையில் தனியார் துறையில் தொழில்புரியும் பட்டதாரி களும் அரசசேவையில் இணைநது கொள்ள விரும்புகின்றனர்.

இவர்களுக்கு அரசதுறையில் தொழில்புரிவதற்கான வாய்பை உடனடியாக ஏற்படுத்திக் கொடுக்க முடியாவிட்டாலும் சில மாதங் களின் பின்னர் அவர்களை அரச துறையில் இணைக்க நடவடிக்கை எடுக்கும் என்றார். (க-61)

# 147 இடங்களில் சி. பி. ஐ. இலஞ்ச ஒழிப்புக்குழு வேட்டை

நாடு முழுவதும் அரசு உயர் அதிகாரிகள் பலரின் வீடுகளில் சி.பி.ஐ. அதிகாரிகள் நேற்று முன் தினம் இலஞ்ச ஒழிப்புச் சோதனை மேற்கொண்டனர்.

தமிழ் நாட்டில் சென்னை, ஸ்ரீரங் கம், குன்னூர் ஆகய மூன்று இடங் களில் இந்த வேட்டை நடந்தது.

சென்னையில் வருமான வரித் துறைத்துணை ஆணையர், பெற் றோலிய நிறுவன மூத்தமேலாளர் இருவர் உட்பட 20 இடங்களில் சோதனை நடைபெற்றது.

சி.பி.ஐ யின் இலஞ்ச ஒழிப்புப் பிரிவு அதிகாரிகள் சென்னை, டில்லி, கொல்கொத்தா, மும்பை, ஹை தராபாத் ஆகிய பெருநகரங்களி லும் நேற்று முன்தினம் காலை தங்கள் வேட்டையைத் தொடங்கி னார்கள்.

அரசு உயர் அதிகாரிகள், வங்கி அதிகாரிகள், பொதுத்துறை நிறு வன அதிகாரிகள் ஆகியோரின் வீடு மற்றும் அலுவலகங்களை இவர் கள் முற்றுகையிட்டனர்.

சென்னையில், தரமணியில் உள்ள மத்திய அரசின் தேசிய ஆய்வுக் கழக விஞ்ஞானி ஆறு முகம், சென்னை வருமானவரித் துறைத துணை ஆணையர் சுலக் கான் பாபு, சென்னைத் துறைமுக பொறியியலாளர் கண்ணன், சென்னை பெறறோலிய நிறுவன மூத்தமேலாளர் சுகுமார், குன்னூ ரிலுள்ள லூயி பாஸ்ரர்,வெறி நாய்க்கடி மருந்து தயாரிக்கும் நிறு வன அதிகாரி சந்திரசேகர் ஆகி யோரின் வீடு மற்றும் அலுவல கங்களில் சோதனை நடைபெற் றதாகச் சி.பி.ஐ. தெரிவித்துள்ளது.

நாடு முழுவதிலும் 147 இடங் களில் நடத்தப்பட்ட இந்தச் சோத னையில் 9 கோடி ரூபா மதிப்புள்ள நகை, பணம் மற்றும் ஆவணங் கள் கைப்பற்றப்பட்டதாக சி.பி.ஐ இயக்குநர் மிஸ்ரா டில்லியில் தெரி வித்தார்.

நாடு முழுவதும் நடத்தப்பட்ட சோதனையில் 65 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. மும்பை மற் றும் பெங்களூரில் பாஸ்போட் அலு வலகங்களில் நடத்தப்பட்ட சோத னைகளில் முத்திரைத்தாள் மோசடி மன்னன் டெல்கிக்குப் போலிபாஸ போட்கள் வழங்கப்பட்டமைக்கான ஆவணங்கள் கைப்பற்றப்பட் டுள்ளன. (து)

## 25 இலட்சம் இலஞ்சம் கேட்டு ஆள் கடத்தல்

திருச்செந்தூரில் 25 இலட்சம் ரூபா இலஞ்சம் கேட்டு பேருந்து அதிபர் மகனை மர்ம நபர்கள் கடத் திய சம்பவம் அங்கு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

நாமக்கல் மாவட்டம் திருச்செங் கோட்டை அடுத்த சாலுப்பாளயத் தைச சேர்ந்த பேருந்து அதிபர் சுப்பிரமணியம் என்பவரையும் அவ ரது மகனையும் மர்ம நபர்கள் சிலர் நேற்று முன்தினம் இரவு காரில் கடத்திச் சென்றுள்ளனர்.பின்னர் சுப்பிரமணியத்தை மட்டும நாமக் கல்லில் இறக்கி விட்டு 25 இலட் சம் ரூபா கொடுத்தால் மாத்திரமே அவரது மகனை உயிருடன்விட முடி யும் என மிரட்டியுள்ளனர்.

கடத்தல்காரர்களிடமிருந்து தப்பி வந்த சுப்பிரமணியம் மகன் கடந்தப்பட்ட சம்பவம் குறித்து பொலிஸில் புகார் செய்தார். இதை யடுத்து விசாரணை மேற்கொண்ட பொலிஸார் திருச்சியையடுத்த சமயபுரத்தில் கடத்தல்காரர்களிட மிருந்து சுப்பிரமணியத்தின் மகனை மீட்டனர். (து)

# இந்தியச் செய்திகள்

## கிருஷ்ணா நீரை திறந்து விடுவதற்கு ஆந்திர முதல்வருக்கு கருணாநிதி பாராட்டு

சென்னை நகரில் குடிநீர்த் தேவைக்காக வரும் 15ஆம் திகதிக குள கிருஷ்ணா நீர் திறந்துவிடப் படுமென ஆந்திர முதலமைச்சர் ராஜசேகரரெட்டி அறிவித்துள்ள தற்குத் தி.மு.க தலைவர் கருணா நிதி அவருக்கு நன்றி தெரிவித் துள்ளார். மத்திய அமச்சர் ரி.ஆர். பாலு சென்னை நகருக்குக் கிரு ஷ்ணா நதி நீரைத் திறந்த விட வேண்டு மென்ற கருணாநிதியின் கோரிக் கையை ராஜசேகர ரெட்டி யிடம் தெரிவிததைதயடுத்து ராஜ சேகர ரெட்டி வரும் 15 ஆம் திகதிக் குள் கிருஷ்ணா நீர் சென்னையை வந்தடைய நடவடிக்கை எடுக்கப் படுமென்று அறிவித்தார்.

இதையடுத்து ராஜசேகர ரெட்டிக்கு நன்றி தெரிவித்து கருணாநிதி 'பாக்ஸ்' செய்தி யொன்றை அனுப்பியுள்ளார். அதில மத்திய அமைச்சர் பாலுவிடம் தான் தெரிவித்த கோரிக்கையை ஏற்று வரும் 15 ஆம் திகதிக்கு முன்பு கிருஷ்ணா நீர் திறந்து விடப்படுமென்று அறிவித்ததற்கு சென்னை மக்கள் சார்பாகவும் தமது சார்பாகவும் ஆந்திர முதல் வருக்கு உளம் கனிந்த நன்றி கூறுவ தாகத் தெரிவித்துள்ளார். (து)



புதுடில்லியில் நடைபெற்ற விழா ஒன்றில் கலந்து கொண்டு விருதுகளை வழங்கினார் இரும்பு மற்றும் இரசாயனத்துறை அமைச்சர் ராம்விலாஸ் பாஸ்வான்.

## இன்று ஒரு தகவல்

# ஒரு பாடம்

அந்தக் காலத்திலெல்லாம் குருகுல வாசம் செய்துதான் படிக்கவேண்டும். ஆசிரியர் ஆச்சிரமத்தில் இருப்பார். அங்கே போய் அவருக்குத் தொண்டுகள் புரிய வேண்டும். துணிதுவைத்துக் கொடுக்க வேண்டும். தூங்கும் போது கால் பிடித்து விட வேண்டும். புழுக்கமாக இருந்தால் விசிறி விட வேண்டும். அப்படியே அவர்சொல்லிக் கொடுக்கும் பாடங்களைக் கற்க வேண்டும். அவர் சொல்லிக் கொடுப்பவற்றை ஓலைச்சுவடிகளில் எழுதிக் கொள்வார்கள். ஆக குருகுல வாசம் என்பது மனதையும் பண்படுத்தி அறிவையும் பண்படுத்தும். அப்படி ஒரு பயிற்சி அது.

அந்தக் காலத்தில் பஞ்சபாண்டவர்கள் ஒரு குருகுலத்தில் படிக்கப் போனார்களாம். ஏற்கனவே அங்கு 15 பேர் இருந்தார்கள். இவர்களையும் சேர்த்து 20 பேர் எல்லோரும் மிக ஆர்வத்துடன் அங்கே படித்துக் கொண்டிருந்தார்கள். இரண்டு ஆண்டுகள் கழிந்தன. எல்லோரும் ஊருக்குத் திரும்ப வேண்டிய நேரம் ஆசிரியர் ஒவ்வொருவராகக் கூப்பிட்டார். "இதுவரை நீ என்ன கற்றுக் கொண்டாய?" என்று கேட்டார். அவரவர்கள் எழுதி வைத்ததைச் சொன்னார்கள் கற்றுக் கொண்டதைச் சொன்னார்கள்.

அங்கே படிக்க வந்தவர்கள் எல்லோரும் புத்திசாலிகள். இளவரசராக இருப்பவர்கள் வேறு, அதனால் அவர்களிடம் அபாரமான கல்வி அறிவை எதிர்பார்த்தார். ஒருவன் வந்தான். தான் எழுதி வைத்திருந்த சரித்திர பாடம் முழுவதையும் படித்துக் காட்டினான். இன்னொருவன் வந்தான் தான் படித்த பூகோளப்பாடம் முழுவதையும் படித்துக் காட்டினான்.

இப்படி ஒவ்வொருவராக வந்து படித்துக் காட்டினார்கள். கடைசியாகத் தருமர் வந்தார். பேசாமல் நின்றார். தன்கையில் இருந்த ஓலைச்சுவடியைப் பிரிக்கவில்லை. ஆசிரியர் இவரிடம் தான் அதிகமாக எதிர்பார்த்தார். ஆனால் அவர் பேசாமல் நிற்கிறார். நீ என்ன கற்றுக் கொண்டாய்? சொல் ஓலைச்சுவடியைப் பிரிந்துப் படி என்றார் குரு. தருமர் அசையவே இல்லை. மெதுவாகச் சொன்னார். ஐயா நான் கற்றுக் கொண்டது ஒன்றே ஒன்று தான. அதுவே வாழ்க்கையில் எனக்கு மிகவும் முக்கிய மான பாடமாக அமையும் என்றார்.

என்னிடம் இரண்டு வருடமாக படித்துக் கற்றது ஒன்றே ஒன்றுதானே? என்றார் முனிவர். அவருக்கு ஒன்றும் புரியவில்லை. மற்றைய மாணவர்களை விட இவர் பண்பில் உயர்ந்தவர், அறிவில் சிறந்தவர். இவரே இப்படிச் சொன்னால் மற்றவர்களின் நிலை என்ன? தர்மா நன்கு யோசித்துச் சொல் இரண்டு வருடமாக நீ கற்றுக் கொண்டது என்ன என்று கேட்கிறேன் என்றார்.

தர்மா முகத்தில் எந்த மாறுதலுமில்லை. இல்லை ஐயா இரண்டு வருடமாக நான் கற்றுக் கொண்ட முக்கியமான பாடம் ஒன்றே ஒன்றுதான் என்றார். இப்போது முனிவருக்குக் கோபம் வந்து விட்டது. உனக்கு வெட்கமாக இல்லையா? உன்னைவிட வயதில் குறைந்தவர்கள் எல்லோரும் எவ்வளவு பாடம் கற்றுக் கொண்டிருக்கிறார்கள். எவ்வளவு விரிவாகப் படித்துக் கொண்டிருக்கிறார் கள். நீயும் ஓலைச் சுவடியில் நிறையக் குறித்து வைத்திருக்கின்றாய்?

ஏன் அவற்றை எடுத்துப் படிக்கக் கூடாது? என்றார் குரு.ஐயா நான் சொல்வது உங்களுக்கு ஏமாற்றமாக இருந்தால் என்னை மன்னிக்க வேண்டும். நான் மிகவும் முக்கியமான பாடமாகக் கற்றுக் கொண்டிருப்பது ஒன்றே ஒன்றுதான். மற்ற எதையும் எடுத்துச் சொல்வதற்கு நான் விரும்பவில்லை. என்றார் தருமர். இதைக் கேட்டவுடன் எல்லா மாணவர்களும் சிரித்தனர். முனிவருக்குக் கோபம் வந்துவிட்டது. ஓங்கி அறைந்து விட்டார் தருமரை. அவரது கன்னம் சிவந்து விட்டது. கண்கள் கலங் கின. ஆனாலும் அவர் அமைதியை இழக்க வில்லை. தலை குனிந்து நின்றார்.

இவரது பிடிவாதம் முனிவருக்கு இன்னும் ஆத்திரத்தை உண்டாக்கியது. இன்னொரு கன்னத்திலும் அறைநது விட்டார். எல்லோரும் பயந்து போய் அமைதயாக நின்றனர். முனிவர் கத்தினார். அப்படி நீ கறற பாடம் தான் என்ன? அதை மட்டும் சொல் என்றார். "ஐயா அதை மட்டும் ஒரு ஓலைச் சுவடி யில் குறித்து வைத்திருக்கிறேன். இந்தாருங்கள் என்றான். குரு அதை வாங்கி சத்தம் போட்டுப் படிததார். எப்படிப் பட்ட சோதனை ஏற்பட்டாலும் நிதா னமிழந்து கோபத்திற்கு ஆளாகக் கூடாது என்று அதில் எழுதியிருந்தது.

அந்த ஒரு கணத்திலேயே முனிவரும் எல்லா மாணவர்களும் தருமரைப் புரிந்து கொண்டனர். அவர் கற்றுக் கொண்டது ஏட்டுச் சுரைக்காய் அல்ல. வாழ்வில பயன்படக் கூடிய முக்கியமான அனுபவப் பாடம் அது. முனிவரின் கண்களில் கண்ணீர். தருமரை அன்புடன் கட்டித்தழுவினார்.

நிதானம் தவறக் கூடாது என்பது நாம் எல்லோரும் கறறுக் கொள்ள வேண்டிய ஒரு பாடம். இந்தக் காலத்தில் சில நிதானம் தவறாத ஆண்கள் உண்டு. அவர்கள் வேறு விதம். "ஒரு ஆசிரியர் மாணவனை ஒரு கன்னத்தில் அறைந்து விட்டார். இவன் நிதானம் தவறவில்லை. ஏன் என்று கேட்டனர். நான் நிதானம் தவறியிருந்தால் எங்கள் வாத்தியார் மறு கன்னத்திலும் அறைந்திருப்பார்" என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

---

### ம. உ. ஆ. குழு அதிகாரிகள் மீது தாக்குதல்

# பொலிஸாரின் நடவடிக்கைகளால் இலங்கை அரசிற்கே தலை குனிவு

(யாழ்ப்பாணம்)

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். மாவட்ட அதிகாரிகள் விசாரணை ஒன்றிற்காக யாழ். பொலிஸ் நிலையத்திற்கு சென்ற போது அவர்கள் மீது பொலிஸார் நடத்திய கண்மூடித்தனமான தாக்குதல்களுக்கு காணாமல் போனோரின் பெற்றோர் குடும்ப அங்கத்தினருக்கான சுயாதீன மனித உரிமை முறைப்பாட்டு அமைப்பு கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

மனித உரிமைகளையும்,சர்வதேச மனித உரிமை சாசனத்தையும் மதித்து பேணிப்பாதுகாப்பதில் அதிக அக்கறை காட்டி வருவதாகத் தெரிவிக்கும் இலங்கை அரசிற்கு அதிகார எல்லையின் கீழ் இயங்கி வரும் பொலிஸார் மனித உரிமைகளை உறுதிப்படுத்தச் சென்றோர் மீது மிலேச்சத்தமாக நடத்திய தாக்குதல் இலங்கை அரசிற்கு பெரும் தலைகுனிவை ஏற்படுத்தியுள்ளது. மனித உரிமைகளைப் பேணி சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நாட்டவேண்டிய பொலிஸாரே மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகளைத் தாக்கி அநாகரிகமாக நடந்து கொண்டுள்ளனர்.

எனவே இந்தச் சம்பவத்துடன தொடர்புடைய பொலிஸ் அதிகாரிகள் அனைவரையும் சட்டத்தின் முன்நிறுத்தி கடும் நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்வது அவசியம் எனத் தெரிவித்துள்ள இவ்வமைபபு மனித உரிமைகள் ஆணைக்குழுவினருக்கே இந்நிலை என்றால் சாதாரண பொதுமக்களுடன் பொலிஸார் எவ்வாறு நடந்துகொள்வர் எனவும் கேள்வி எழுப்பியுள்ளது.

இது குறித்து அவர்கள் கண்டன அறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளனர். (ப)

# இலங்கைப் பொருளாதாரத்தை ஜப்பான் நிலைக்கு உயர்த்துவேன்

## தான் ஜனாதிபதியானால் முடியும் என்கிறார் ரணில்

(கொழும்பு)

அடுத்த ஜனாதிபதியாக தான் தெரிவு செய்யப்படும் பட்சத்தில் இலங்கையின் பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்பி நாட்டை ஜப்பானின் பொருளாதார தரம் வாய்ந்ததாக உயர்த்தப் போவதாக ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். மொறட்டுவவிலுள்ள சொய்சாபுர வீடமைப்புத் திட்டத்தில் நடைபெற்ற கட்சியின் நிறைவேற்றுக் குழுக கூட்டத்தில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நாட்டின் கொள்கைகளை அடிக்கடி மாற்றிக் கொண்டே போவதால் நாடு ஐந்து ஆண்டுகள முன்னோககியும் பின்னர் பத்து ஆண்டுகள் பின்நோக்கியுமாக போய்க்கொண்டிருக்கிறது. தான் நிறைவேற்று அதிகாரங்களுடனான ஜனாதிபதியாக வந்தால் நாட்டின் பொருளாதாரத்தை மிகச் சிறந்ததொரு திறந்த பொருளாதாரமாக பத்து ஆண்டுக்குள் மாற்றியமைத்து விடுவேன் என்று தெரிவித்தார்.

வறுமை ஒழிப்பிற்கு முதன்மை கொடுக்கும் ஒரு பொருளாதார கொள்கையை முன்னெடுக்கும் போது பத்து அல்லது பதினைந்து ஆண்டுகளில் நிரந்தரமான ஒரு வளர்ச்சியும் செழுமையும் சாத்தியமானதே. ஒரு அரசாங்கம் பொருளாதாரத்தை உயர்த்த அடுத்து ஒரு அரசாங்கம் தோன்றி அதனை தாழ்வு படுத்துவதுமான இந்தப் போக்கை நிறுத்தவேண்டும் என்றார். (இ-6)

## இராசி பலன்

**01.09.2004**
**(புரட்டாதி 15 வெள்ளிக்கிழமை)**
**துதியை முன்னிரவு -7.41மணிவரை**
**அச்சுவினி காலை 6.13 வரை**
**பரணி காலை 6.14 தொடக்கம்**
**இராகுகாலம் 10.32-12.02 மணிவரை**
**சுப நேரம் 6.02- 7.32 மணிவரை**
**மகா பரணி ,அமிர்தசித்தம்**

**மேடம்**
வெகுமானம், சயன சுகம், மனமகிழ்ச்சி, நல்ல முயற்சி.

**இடபம்**
சோம்பல் நிலை, பிறருக்கு உதவுதல், சுபசெலவு, முயற்சி தாமதம்.

**மிதுனம்**
ஆனந்தம், நண்பர்கள் சந்திப்பு, செய்தொழில் முன்னேற்றம், தனதானிய சேர்க்கை.

**கடகம்**
இஷ்டசித்தி, நன்கொடை, பெரியோரால் மதிக்கப்படுதல், ஆரோக்கியம்.

**சிங்கம்**
எதிர்பாராத செலவு, உத்தியோக பரிசம், சரீரப் பிரயாசை, வீண் பயம்.

**கன்னி**
எதிர்பாராத பிரச்சினை, முழங்கால் வலி, மனக் கவலை, பொருள் வீரயம்.

**துலாம்**
தேக சௌக்கியம், தனலாபம், கீர்த்தி, நல்ல முயற்சி.

**விருச்சிகம்**
சத்துருஜெயம்,தடைப்பட்ட காரியம் கைகூடும், உடல் நலம்,உற்சாகம்.

**தனுசு**
குடும்பக்கவலை, அஜீரணரோகம், காரிய தாமதம், பணவிரயம்.

**மகரம்**
தன்னம்பிக்கைகுறைவு, கல்வியில் ஆர்வம், தெய்வ சிந்தை, ரோக நிலை.

**கும்பம்**
கூட்டு முயற்சி, நற்கீர்த்தி, உற்சாகம், புதிய தகவல்.

**மீனம்**
மனோசங்கடம்,போசன சுகக்குறைவு, அதிக செலவு, கௌரவக்குறைவு.

*பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது. -வளவன்*

# படுகொலைச் சம்பவங்களையடுத்து கொழும்பில் தேடுதல் நடவடிக்கை

(கொழும்பு)

கொழும்பு வெள்ளவத்தை, பாணந்துறைப் பகுதிகளில் நேற்று முன்தினம் இரவு ஸ்ரீலங்காப் படையினரும் பொலிஸாரும் இணைந்து தீவிர தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

இத் தேடுதல் நடவடிக்கையின்போது வீடுகள், வர்த்தக நிலையங்கள் மற்றும் தரித்து நின்ற வாகனங்கள் என்பன தீவிர சோதனைக்குட்படுத்தப்பட்டதுடன் சந்தேகத்திற்கிட மானவர்களும் தீவிர விசாரணைகளுககு உட்படுத்தப்பட்டனர். இந்தத் தேடுதல் நடவடிக்கைகளில் சிலர் மேலதிக விசாரணைக்கு அழைத்துச்செல்லப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இப் பகுதிகளில் தொடர்ந்து இடம்பெற்றுவரும் படுகொலைச் சம்பவங்களையடுத்தே இந்தத் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் கடந்த 3 தினங்களாகத் தொடர்ச்சியாக இந்தத் தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ற-8)

# யாழ்.குடாநாட்டின் பல பகுதிகளிலும் பெரும்போக நெற்செய்கை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

. யாழ்ப்பாணக் குடாநாட்டில் பெரும்போக நெல் விதைப்பினை குடாநாட்டு விவசாயிகள் தற்போது ஆரம்பித்துள்ளனர். இங்கு கடந்தவாரம் பெய்த மழையினைத் தொடர்ந்தே நெல் விதைப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்வருட பெரும்போக நெற் செய்கைக்கான விதை நெல் வகைகளை கமநல சேவைகள திணைக்களம் தென்பகுதியில் இருந்து எடுத்துவந்து விவசாயிகளுக்கு விநியோகம் செய்து வருகின்றது என கமநல சேவைகள் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் க. சுந்தரேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கும்போது கமநல சேவைகள் திணைக்களம் இம்முறை பெரும் போகத்திற்கென ஏ.ரி.353, ஏ.ரீ.402, பிஜீ. 351போன்ற விதை நெல் ரகங்கள் கொண்டுவரப்பட்டு கமநல சேவைகள் நிலையங்கள் ஊடாக விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இதேசமயம் தென்மராட்சியில் உள்ள மறவன்புலவு, சாவகச்சேரி, சின்ன நுணாவில் பகுதிகளான உயர்பாதுகாப்பு வலயப்பகுதியில் நெற்செய்கையை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கென உணவு விவசாய நிறுவனம் மூலம் விதை நெல் மற்றும் உர வகைகள் வழங்கப்படவுள்ளதாகவும் தெரியவருகின்றது. இதேசமயம் மேற்படி பகுதியில் உள்ள நெற்செய்கை வயல்களை உழவு இயந்திரங்களைப பயன்படுத்தி பண்படுத்துவதற்கு இராணுவத் தரப்பினரால் அனுமதி வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதனைத் தொடர்ந்து இப் பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் தமது வயல்களை பண்படுத்தும் பணியில் தற்போது ஈடுபட்டுள்ளனர் எனத் தெரியவருகின்றது. (ப-16,33,127)

# கல்விப் பொதுத் தராதர (சா/த) மாதிரிப் பரீட்சை - 2004

## General Certificate of Examination (Ord. Level) Model Examination - 2004

தமிழ்மொழியும் இலக்கியமும் II
நேரம் - 2 மணி யாலம்
ஆக்கம் :
திரு. கா. திருப்பதி (B.A)
(யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி)

**எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. விடைகளை தெளிவான கை எழுத்தில் எழுதுக. இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் 80ஆகும்.**

**(01) பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து ஏறத்தாள 250 சொற்களில் அமையுமாறு விடை எழுதுக. நீங்கள் தெரிவு செய்த விடயத்துக்கு பொருத்தமான தலையங்கம் இடுக.**

(அ) தற்காலத்தில் இயற்கைக்காடுகள் பல அழிக்கப்படுகின்றன. வீட்டுத தேவைகள் இருப்பிட வசதிகளை மேற்கொள்ளல் வியாபாரத்திற்காக மரங்களை வெட்டுதல் போன்ற மானிட நடவடிக்கைகளினால் காடுகள் அதிகமாக வெட்டப்படுகின்றன. அதனால் மழைவீழ்ச்சி குறைவடையும். மண்ணரிப்பு ஏற்படும். வன விலங்குகளின் பாதுகாப்பிடமற்றுப்போக்கும். இதனால் மக்கள் பல இன்னல்களை அனுபவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் காடுகள் அழிக்கப்படாது தடுக்கப்படல் வேண்டும். இவ்விடயங்களை கருத்திற் கொண்டு கட்டுரை வரைக.

(ஆ) நவீன விஞ்ஞான தொழில்நுட்பத்துறைகள் இன்று துரித வளர்ச்சி கண்டுள்ளன. 21ஆம் நூற்றாண்டு முற்றிலும் விஞ்ஞான மயமாகியுள்ளது. ஆரம்பத்தில் தொடர்பாடலானது நிறஒலி எழுப்புதல் பறவைகளைத் தூதுவிடல் இன்னும் பல செயற்பாடுகள் மூலமாக மேற்கொள்ளப்பட்டது. ஆனால் இன்று தொடர்பாடல்துறை பல்வேறு நவீன சாதனங்களின் ஊடாக இணையம் வரையும் வளர்ந்து விட்டது. இதன் காரணமாக இன்றைய உலகம் சுருங்கி விட்டது எனக் கூறுகிறார்கள். இம்மாற்றங்களை கருத்திற் கொண்டு கட்டுரையினை வரைக.

(இ) இன்று விஞ்ஞான வளர்ச்சியின் காரணமாக திரைப்படக்கலை வளர்ச்சி அடைந்துள்ளது. இந்தத் திரைப்படத்தை உலகிலுள்ள பலரும் பார்த்து ரசிக்கிறார்கள். இவ்வாறு திரைப்படத்தை பார்ப்பவர்களுள் மாணவர்களும் அடங்குவர். இவர்கள் திரைப்படம் பார்ப்பதால் நன்மையடைகிறார்கள் என ஒரு சாரார் கூறுகின்றனர். இன்னொரு சாரார் திரைப்படம் பார்ப்பதால் மாணவர்கள் தீமையடைகிறார்கள் எனக் கூறுகின்றனர். இவ்வாறு இரண்டு விதமாகவும் விவாதித்து நிகழ்த்தப்பெறும் உரையாடலை எழுதுக.

(ஈ) சிறுகதை
“இளங்கன்று பயமறியாது” என்ற பழமொழிக்கேற்ப சிறுகதை ஒன்று வரைக.

(உ) விவசாயிகளுள் தமது உற்பத்திப் பொருட்களை சந்தையில் கொண்டு சென்று விற்கிறார்கள். இதேபோல் சந்தை வியாபாரிகளும் பொருளைக் குறைந்த விலையில் வாங்கி கூடிய விலையில் விற்று இலாபம் தேட முனைகிறார்கள். இதற்கிடையில் பொருளை மலிவாக வாங்க வேண்டும் என்று சந்தையை நோக்கி பொதுமக்கள் வருகிறார்கள். இவ்வாறு விற்போரும் வாங்குவோரும் ஒன்று கூறுமிடமே சந்தையாகும். அத்தகைய தன்மையுடைய ஒரு சந்தைக் காட்சி பற்றி வர்ணித்து எழுதுக. *(30 புள்ளிகள்)*

**02) கீழே தரப்பட்டுள்ள (அ), (ஆ), (இ), (ஈ), என்னும் உரைப்பகுதிகள ஒவ்வொனறினதும் சுருக்கத்தை 15-20 சொற்களில் அமையக்கூடியவாறு வேறுவேறாக எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையை குறிப்பிடுக)**

அ) செய்யுளாயினும் உரைநடையாயினும் ஒருவர் எழுதும் எழுத்து முழுவதிலும் அவருடைய நடை ஒன்று அமைந்துவிடுகிறது. அதை மற்றொருவர் பினபற்ற இயலாது. பின்பற்றி எழுத முயன்றால் சிலவேளைகளில் வெற்றி பெறலாம். அவ்வாறு வெற்றி பெறுவதற்கும் முன்னவரின் மனநிலை, சொற்கோவை விருபபு, வெறுப்புக்கள், உணர்ச்சிகள் முதலியவற்றை எவ்வளவு காலம் மற்றொருவர் மேற்கொண்டு வாழ்தல் இயலும். அவ்வாறு வாழ முயன்றால் தமக்கு என்று ஒருவகை வளர்ச்சியும் இல்லாமற்போகும். அவ்வாறு வாழும முயற்சியும் நெடிது நிலைக்காது. ஆதலின் ஒருவர் நடையை மற்றொருவர் பின்பற்றி எழுதல் என்பது இயலாதது. ஓரளவு இயன்றாலும் அதனால் பயனில்லை.

ஆ) வழக்கமான கோடை காலம் அளவு கடந்து நீடித்து விட்டால் மக்கள் படுங்கஷ்டங்கள் சொல்லுந்தரத்தனவல்ல. வெயிலின் வெபபமோ தாங்க முடியாததாகிவிடும். சிறுவர்கள் வளர்ந்தவர்கள் என்ற வித்தியாசமின்றி எல்லோருமே இக்கால கட்டத்தில கஷ்டத்துக்குள்ளாகின்றனர். உலகில் உயிர்வாழுகின்ற மக்கள் மட்டுமன்றி மரஞ்செடி,கொடிகளும் மழைக்காகத் தவிக்கின்றன. மழைவரும் வரும் எனக் காத்திருக்கும் அவைகளும் ஏமாந்துவிட்டவை போல வாடிவதங்கிச் சோர்ந்து காணப்படுகின்றன. புல், பூண்டுகள், காய்ந்து கருகி விடுகின்றன. இவ்வாறான நிலையில் விலங்குகளும் பறவைகளும் வேறுள்ள எல்லா உயிர்களும் மழையை எதிர்பார்த்து தவங்கிடக்கின்றன. கடுங்கோடைக்குப் பின் மழை பெய்துவிட்டாலோ அவை அடையும் மகிழ்ச்சிக்கு அளவே கிடையாது. கடும் மழையின் பின் குளம் குட்டைகள் நிரம்பி வழிகின்ற இந் நிலையில் சிறுவர்கள் கடதாசிகளில் கப்பல் செய்து நீர் நிலைகளில் விட்டு விளையாடுவர்.

இ) குத்து விளக்கின் சுடரொளியில் திருக்குறள் நூலையும் கற்று அறிஞர் ஆகலாம். அதே குத்து விளக்கிலிருந்து பெறப்படும் தீயைக் கொண்டு ஊரையே எரித்து சாம்பர் ஆக்கலாம். பஞ்ச பூதங்களுள் ஒன்றான தீக்கு விருப்பு வெறுப்புக்கிடையாது. நல்லதீ,தீயதீ என்று இரண்டு வகையான தீ உலகில் இல்லை.தீ ஒன்று தான். தீயைப் பயன்படுத்துபவர்களின் நோக்கு, உணர்வு, தன்மை என்பவற்றைப் பொறுத்து தீயானது நல்லதும் கெட்டதும் ஆகின்றது. சிந்தனைகளும் நல்லன, கெட்டன, பயனுள்ளன, பயனற்றன என அமைந்து விடுதற்கெல்லாம் மனிதன் தான் காரணம். சிந்தனைகளைத் தோற்றுவிப்பவனும் மனிதன். தான். அவற்றின் விளைவுகளை அனுபவிப்பவனும் மனிதன் தான். அதனால் சிந்தனைகள் மனிதனுக்குக் கட்டுப்பட்டவை. அப்பாற்பட்டவையல்ல.

ஈ)சிறுகதை தனக்கென ஒரு கட்டுக்கோப்பையும் வளர்ச்சியையும் உடையது. அது நாவலிலிருந்து நீளத்தால் மாத்திரம் வேறுபடுவதன்று. பொது அமைப்பு பாங்கிலும் வளர்ச்சியிலும் வேறுபடுகின்றன. நாவலாசிரியன் ஆறுதலான போக்கிலே கதையை நடத்திச் செல்வான். இடையிடையே காட்சிகளை வர்ணிபபதற்கும் நிகழ்ச்சிகளின் முக்கியத்தை விளக்குவதற்கும் பாத்திரங்களின் செயல் நோக்கங்களையும் உள்ளுணர்வுகளையும் எடுத்துக்காட்டுவதற்கும் மற்றொன்று விரித்தலாகப்பல பக்கங்கள் எழுதிச் செல்வான் ஆனால் சிறுகதை எழுத்தாளனோ ஒரு சூழ்நிலையின் அல்லது பாத்திரத்தின் யாதாயினுமோர் அமிசத்தை தெரிந்தெடுத்து அதனை மிகுந்த செறிவான முறையிலே வாசகருக்கு முன்வைக்கின்றான். பொதுவாக ஒரு பாத்திரததின் குறித்தவொரு குணவியல்பிலே அல்லது ஒரு தனிச் சம்பவத்திலே விபரங்களைக் குவியவைத்துக்காட்டுவான் *(4x 5 =20 புள்ளிகள்)*

**(03) பின்வரும் உரை நடைப் பகுதியை வாசித்து அதன் கீழ்த் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக?**

அ) குடியேற்றவாதம் காரணமாகப் பல பண்பாட்டுப் பிரச்சினைகளும் தோன்றலாயின. குடியேற்றங்கள் தாபிக்கப்படுவதில் பல்வேறு கருத்தியல்களின் செல்வாக்கும் காணப்பட்டது. சமயச் சார்பான நோக்கங்களும் மிலேச்சரை நாகரிகமாக்கும் எண்ணமும் இவற்றுட் சிலவாகும். வெள்ளை மனிதனின் சுமையைத் தாங்குதல் என்ற கருத்தும் குடியேற்றங்கள் தாபிக்கப்படுவதாக இருந்தது. கிறிஸ்தவ மதத்தைப் பரப்புவதும் கிறிஸ்தவர்களுக்கு உயர்பதவிகளை வழங்கிக் கௌரவிப்பதும் குடியேற்ற ஆட்சியாளரின் பூட்கையிலே குறிப்பிடத்தக்க அமிசங்களாக இருந்தன.

இவவழி குடியேற்ற நாடுகளிலே தமக்கு விசுவாசமிக்க ஒரு மக்கட் குழுவை உருவாக்குவதே குடியேற்ற ஆட்சியாளரின் நோக்கமாயிற்று. இந் நாடுகளிலே நிறுவப்பட்ட கலவர் முறைமையும் மேலைத்தேயப் பண்பாட்டைப் புகுத்துவதற்கு ஏற்ற வகையிலேயே அமைக்கப்பட்டிருந்தது. இதன் விளைவாக தமது சொந்தப் பண்பாடுதானும் கீழ்த்தரமானது என்ற கருத்துடைய சுதேசிகள் கூட்டமொன்று பெரும்பாலான குடியேற்றங்களில் உருவாக்கலாயிற்று. அங்கே மேலைத்தேய நடை, உடை பாவனைகளைப் பின்பற்றியவர்களும் இருந்தனர். மேலைத்தேயக் கருத்துக்களைச் சிறந்தன எவையென வரவேற்றவர்களும் இருந்தனர். அதுமட்டுமன்று அடிக்கடி குடியேற்ற ஆட்சியாளரைப்போன்று சிந்தித்துக் கருத்து வெளியிடவும் அபிப்பிராயம் தெரிவிக்கவும் அவர்கள் பழகினார்கள்.

அ. மிலேச்சத்தனமானவரையும் நாகரிகமாக்குவது எது?
ஆ. குடியேற்றவாசிகளின் பூட்கைகள் எவை?
இ. “தமக்கு விசுவாசமிக்க ஒருமக்கள் குழுவை உருவாக்குவது” என்பதில் எழுத்தாளன் கூற வந்தவிடயம் யாது?
ஈ. கலவந் முறைமை எவ்வாறு அமைக்கப்பட்டிருந்தது?
உ. குடியேற்றங்கள் தாபிக்கப்படுவதற்குரிய காரணங்கள் எவை?
ஊ. இவ் உரைப்பகுதியின் கருத்துப்படி சுதேசிகளின் எண்ணப்பாங்கு எவ்வாறிருந்தது?
எ. குடியேற்ற வாதத்தினால், குடியேற்ற நாடுகளில் ஏற்பட்ட முக்கியமான பண்பாட்டுப் பிரச்சினை யாது? *(15 புள்ளிகள்)*

4. யாழ்.குடாநாட்டில் அண்மைக்காலங்களில் ஏற்பட்ட யுத்த நடவடிக்கைகளால் உமது பாடசாலையின கட்டடங்களும், தளபாடங்களும் சேதமடைந்துள்ளது என்பதாகக் கருதிக்கொள்க. நீர் உமது பாடசாலையில் உள்ள இத்தகைய குறைபாடுகளை கருத்தில் கொண்டு சமூகசேவை நிறுவனமொன்றிற்கு இக் குறைபாட்டை நீக்கக்கோரி 100 சொற்களுக்குக் குறையாமல் ஓர் கடிதம் எழுதுக. *(15புள்ளிகள்)*

## கல்விப் பொதுத்தராதரப்பத்திர ( சாதாரண தர) பரீட்சை, தமிழ் மொழியும் இலக்கியமும் III (2 மணித்தியாலம்)

**1, 2, 3, 4 ஆம் வினாக்களுக்கும் 5-7 வரையுள்ள வினாக்களுள் ஒரு வினாவும் ஆக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

(01) அ. “தீரவே பசித்தார் செய்வ தென்....”
1. இக்கூற்று யாரால் கூறப்பட்டது?
2. இக் கூற்று யாருக்கு கூறப்பட்டது?
3. யாருக்கு பசி ஏற்பட்டது?
4. பசித்தவருக்கு உணவு வழங்க எத்தகைய ஏற்பாடுசெய்யப்பட்டது?

ஆ. “நினக் குஞ் சேனையோடு நெருங்களத்தயரின் வெய்போர்....”
1. இக் கூற்று யாரால் கூறப்பட்டது?
2. இக் கூற்று யாருக்கு கூறப்பட்டது?
3. எச்சந்தப்பத்தில் கூறப்பட்டது?
4. நெடுங்களத்தயர் என்ற சொல்லினூடாக விளங்கக்கூடியது யாது?

இ. “எனக்குப் பழங்கறிச் சட்டிக்குள்ள போட்டு வைச்சிற்று சாப்பிடு நான் ஒரு ஆளைப் பாத்திட்டு வரவேணும்....”
1. இக்கூற்று யாரால் கூறப்பட்டது?
2. இக்கூற்று யாருக்குக் கூறப்பட்டது?
3. எச்சந்தப்பத்தில் கூறப்பட்டது?
4. “பாத்திட்டு வரவேணும்” என்பதன் திருத்திய வடிவம் யாது?

ஈ. “இந்திரன் செம்மல் பண் (டு) ஓர்
இராவணன் என்பான் தன்னைச்
சுந்தரத் தோள்க ளோடும்
வலிவடைத் தூங்காச் சுற்றிச்
சிந்துரக் கிரிகள் தாவித்
திரிந்தனன்....”
1. இக்கூற்று யாரால் கூறப்பட்டது?
2. யாருக்குக் கூறப்பட்டது?
3. இந்திரன் செம்மல் என்பது யாரைக் குறிக்கும்?
4. இந்திரக் கிரிகள் என்பது யாது?

உ. “அதிகாரம், புகழ், செல்வம் என்பன வந்துவிட்டால் மனிதருக்கு மதம் பிடித்து விடுவதாகக் கூறப்படுகின்றது. தாங்களும் அதற்கு விதிவிலக்கல்ல போலும் உங்கள் மனமும் கணத்திற்கு கணம் மாறுகிறதே....”
1. யாரால் கூறப்பட்டது?
2. யாருக்குக் கூறப்பட்டது?
3. எச்சந்தப்பத்தில் கூறப்பட்டது?
4. இங்கு குறிப்பிட்ட மதம் என்பதன் இரண்டு கருத்துக்களையும் தருக,

**(02) பின்வரும் செய்யுட்களின் பொருளை இக்கால உரை நடையில் எழுதி அவை ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்துக்களிலுள்ள தொடர்புகளின் சிறப்புக்களை விளக்கி எழுதுக.**

1. வழிவருய் இளைப்பினோடும் வந்திய பசியினாலே
அழிவுறுய் ஐயன் என்னும் அன்பினிற் பொலிந்து சென்று
குழி நிரய் பாதபுன் செய் குறும்பயிர் தடவிப்பாசம்
பழிமுதல் பறிப்பார் போலப் பறித்தவை கறிக்கு நல்க

2. ஜென்ய நாட் டொடங்கிளான் செய்த தீவினை
என்முது குளுக்கிற விறுத்தாற் புலைக்
கன்மிகள் குழுமுதீக் கடற்கி டங்கிடை
அம்மை யி லயித்து மென் நஞ்சுகின்றனன்

3. அயல் கடந் (து) எரிய நோக்கும்
அரக்கரைக் கடக்க ஆழித்
துயில் கடந் (து) அயோத்தி வந்தாள்
சொற்கட வாத. தூதன்
வெயில் கடந்திலாத காவல்
மேருவின் மேலும் நீண்ட
எயில் கடந்து (து) இலங்கை எய்தி
அரக்கன (து) இருக்கை புக்கான்

4. கையினில் உலக்கை பற்றிக் காந்தளில் உதிரம் பாய
மெய்யினில் வெயர்நீர் சிந்த விழியினில் அருவி பாய
நெய்யினில் முடித்த கூந்தல் நெல் குத்தும் கொடுமைகாணா
மையினில் திகழ்வேல் கண்ணார் அரம்பையர் மறுகிச் சோர்ந்தார்

5. கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி
தானுமதுவாகப் பாவித்துத்- தானும் தன்
பொல்லாச் சிறகை விரித்தாடினாற் போலுமே
கல்லாதான் கற்ற கவி

(4ஆம் பக்கம் பார்க்க)

# பிள்ளைகளை செயற்திறன் மிக்கவர்களாக வளர்ப்பதே துஷ்பிரயோகத்திலிருந்து பாதுகாப்பதற்கான சிறந்தவழி

**இன்று அனைத்துலக சிறுவர் தினமாகும். இத் தினத்தை முன்னிட்டு இக்கட்டுரை வரையப்படு கின்றது.**

ஒரு சமுதாயத்தில் அதன செயல்பாடு ஒன்று நலிவடைந்து செல்கின்றபோது அதனை வலுப் படுத்துவதற்காக பல்வேறு விழிப்புணர்வு செயற்றிட்டங் கள் நடைமுறைப்படுத்தப்படு கின்றன. சிறுவர்கள் உடல ரீதியிலும் உளரீதியிலும் பல் வேறுபட்ட சந்தர்ப்பங்களில் பெரும்பாலும் பாதிக்கப்படு கின்றார்கள் என்பதனை அடிப் படையாகக்கொண்டு அவர்களின் உாிமைகளை முதன்மைப் படுத் தும் வகையில் உருவாக்கப் பட்டதே உலக சிறுவர்தின மாகும்.

சிறுவர்களின் நலன்கள் தொடர்பான ஐ.நா.சபையின் செயற்பாடுகள் முதன்மையான தாகும். காரணம் சிறுவர்கள் உடலாலும் அனுபவத்தாலும் வளர வேண்டியவர்கள். அவர்க ளின் நலனில பெரியவர்களே அதிக கவனம் செலுத்த வேண் டும் என்பதுடன் ஒவ்வொரு நாடும் இதுதொடர்பான வெளிப் பாட்டைக்காட்ட வேண்டும் என் பது ஐ.நா.சபையின் எதிர்ப்பார்ப் பாகும்.

சிறுவர் உரிமைகள் எனற சிந்தனை முதலாம் உலக மகா யுத்தத்தின் பின்னர் 1923இல் எக்லாரன் ஜெப் எனும் ஆங் கிலேய பெண்மனியால் சிறு வர்களின் உயரிய நலனை அடிப்படையாகக் கொண்டு முத லாவது பிரகடனம் வரையப் பட்டது. இதனை 1948இல் ஐ. நா.சபை ஏற்றுக்கொண்டு உறு திப்படுத்தியது. 1979ஆம் ஆண்டு குழந்தைகளின் சா்வதேச ஆண் டாக பிரகடனப்படுத்தப்பட்டு 1989ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 20ஆம் திகதி ஐ.நா்.பொதுச் சபையினால் சிறுவர் உரிமை கள் சமவாயம் ஏற்றுக்கொள் ளப்பட்டது. 1990இல் இச்சட் டம் அனைத்துலக சடடமாக பிர கடனப்படுததப்பட்டதுடன், 1991இல் இலங்கை அரசினாலும் உறு திப்படுததப்பட்டது. இதன் வெளிப் பாடாக உருவாக்கப்பட்டதே தேசிய சிறுவா பாதுகாப்பு அதிகாரசபையும் அதன் கிளை களாக மாவட்ட சிறுவர் பாது காப்புக் குழுக்களுமாகும் யாழ்ப் பாணத் தில் மாவட்ட சிறுவர் பாதுகாப்புக்குழு யாழ்.போ தானா வைத்தியசாலை அறை இல.30 இல் இயங்கிவருகின் றது.

### பணிகளும் செயற்பாடுகளும

* சிறுவர்களது உரிமை களை வலியுறுத்தல்.

* உடல், உள, பாலியல ரீதி யாக பாதிப்புக்குள்ளாகும் சிறு வர்களைப் பாதுகாத்தலும், பரா மரித்தலும்.

* சிறுவர்களுக்காகப் பணி யாற்றும் உள்ளூர், தேசிய மற் றும் சா்வதேச நிறுவனங்களு டன் தொடர்புகளை வைத்தி ருத்தலும், உதவிகளை பெற் றுக்கொடுத்தலும்.

* சிறுவர் உரிமைகள், துஷ் பிரயோகம் பற்றிய பத்திரிகை விளம்பரங்கள், துண்டுப் பிர சுரங்கள், சஞ்சிகைகளை பிர சுரித்தலும், வெளியிடலும்.

* சட்ட மருத்துவ, கல்வி அடிப்படை உரிமை மறுக்கப் பட்ட பிள்ளைகளுக்கு அவற்றை வழங்க நடவடிக்கை எடுத் தல்.

* சிறுவர் மேம்பாடு தொடா பான ஆய்வுகளை மேற்கொண்டு உரிய தரப்பினர்க்கு ஆலோ சனை வழங்கல்.

* சிறுவர், சிறுவர் நல நிறு வனங்கள் தொடர்பான தகவல் திரட்டுதலும், கண்காணித்த லும்.

* பாடசாலை மட்டத்தில் சிறுவர் பாதுகாப்புக் கழகங் களை உருவாக்கி சிறுவர்களு டன் நேரடி உறவை வளர்த் தல்.

* சிறுவர் உரிமைகள், துஷ பிரயோகம் தொடர்பாக சிறு வர்களைக் கையாளும் நபர் களுக்கு பயிற்சித் திட்டங் களை ஒழுங்குசெய்தல.

சிறுவர் உரிமைகள் தொடா பான சிந்தனை சிறுவர் நலனை அடிப்படையாகக்கொண்டு உரு வாக்கப்பட்ட பொழுதிலும் நடை முறைச் செயற்பாட்டில் நாட் டுக்கு நாடு சமூகத்திற்கு சமூ கம் சூழல், அரசியல், மதம், மற்றும் பல காரணிகளால் வேறுபாட்டைக் கொண்டுள்ளது. எமது நாட்டை பொறுத்தவரை யில் அரசியல் மற்றும் மதக் காரணிகள் பெரும்பாலும் சிறு வர் உரிமைகளை பாதிப்படை யச் செய்கின்றது. அத்துடன் பெற்றோரின் வளர்ப்பு முறை சிறுவர்களை சுய சிந்தனை குனறிய அல்லது உருவாக்கும் திறன் குன்றியவர்களாக்குகின் றது. இதனால் சிறுவா உரி மைகள் தொடர்பாக ஒவ்வொரு வரும் விழிப்புணர்வு அடைய வேண்டியவர்களாகின்றனர்.

உங்களது பிள்ளைகளின் உரிமைகள் மறுக்கப்படுகின்ற போதும்..........

தேவைகள் தடுக்கப்படுகின்ற போதும் அவர்கள் துஷ்பிர யோகத்திற்குள்ளாக்கப்படுகின் றனர். 18வயதிற்குக் குறைந்த பிள்ளைகள் உடல், உள, பாலி யல் ரீதியாக பிரச்சினைக்குட் படுத்தப்படுகின்ற போது அவர் களது... ஆளுமை வளர்ச்சியில் பாதிப்பேற்படலாம்.

* நடத்தைக் கோலங்கள் மாற்றமடையலாம்!

* கல்விச் செயற்பாட்டில் ஆர்வம் குறையலாம்!

* தனித்துவமான திறமை கள் இழக்கப்படலாம்.

* தவறான பாதைகளில் பயணிக்கத் தொடங்கலாம்.

* உறவுகளில் சிக்கல்கள் தோன்றலாம்.

* உணர்வுகளில் சிதைவு கள் ஏற்படலாம்! எனவே தான் அவதானமாக இருங்கள்.

பிரச்சினைக்குள்ளாக்கப்பட்ட சிறுவர்களுக்கு உடனடியாக பொருத்தமான நிறுவனங்களு டன் தெடர்புகொண்டு தேவை யான உதவிகளை பெற்றுக் கொடுங்கள்.

எமது சமூகத்தில் காணப் படும் சிறுவர் துஷ்பிரயோகங் களிற்கு பெரும்பாலும் (90% மேலானவை) நெருங்கிய குடும்ப உறவினரே காரணமாகின்றனர். அவற்றிலும் தாய்வழி உறவினா் அல்லது மறுதிருமண முறையான வாகளால் (பலதாரமணம்) மேற் கொள்ளப்படுவதை மாவட்ட சிறுவர் பாதுகாப்புக்குழுவில் பதிவுகள் உறுதி செய்கின் றார்.

### சிறுவர் துஷ்பிரயோகத்தின் வகைகள

* உடல் ரீதியிலான துஷ் பிரயோகம்.

* கல்வி, போசாக்கு மருத் துவ விடயங்கள் கவனிக்கப் படாது விட்ல்.

* உணர்வுகளுக்கு மதிப் பளிக்காது விடுதல்.

* பாலியல் துஷ்பிரயோகம்.

* சிறுவா்களை வேலைக்கு அமர்த்துவது.

**பாலியல் துஷ்பிரயோகம்**

**சிறுவர் துஷ்பிரயோகம் செய்யும் அந்நியர்**

↓

**சிறுவர் துஷ்பிரயோகம் செய்யும் அயலவர்**

↓

**விவாகம் புரியக் கூடாதவர் களால் செய்யப்படும் சிறுவர் துஷ்பிரயோகம்**

**உடல் ரீதியிலான துஷ்பிரயோகம்**

↓

**ஆபத்தான துஷ்பிரயோகம் ஆபத்தான காயங்கள்**

↓

**சிறு காயங்கள்**

↓

**கடும் தண்டனை**

### சிறுவர் துஷ்பிரயோகம் பற்றிய வரைவிலக்கணம்

சிறுவர் துஷபிரயோகம் என் பது என்ன? சிறுவர் துஷ்பிர யோகம் பற்றிய பல்வேறு விப ரிப்புக்கள் உளளன. கீழ்கண்ட வகையில் தான் ஆரம்பத்தில் இது விபரிக்கப்பட்டது.

சாத்தியமாகக்கூடிய வகை யில் ஆரோக்கியம் மற்றும் விருதகி என்பது ஒரு பிள்ளை யின் மேம்பாட்டிற்காக சமூகம் உருவாக்கிக்கொடுக்கின்ற சகல அடிப்படை வசதிகள் மற்றுமு சேவைகள் அவர்களது உரிமை களை பெற்றுக்கொடுக்ககூடி யவையாக இருத்தல்.

பரந்துபட்ட வரைவிலக்கணம்: பிள்ளைகளுக்கு நேரடியாகவோ மறைமுகமாகவோ தங்கு விளை விக்கக் கூடிய செயற்பாடு மற்றும் வளர்ந்தோராக பாதுகாப்பான நல்ல ஆரோக்கியமுள்ளவராக வளரக் கூடிய வழிமுறைகளை தனி நபர்களாகவோ, ஸ்தாபனங் களாகவோ, தமது செயற்பாடுக ளால் மற்றும் தவறுகளால் (செய்ய வேண்டியவைகளைச் செய்யாது விடுவதால்) தடுப்பது.

சிறுவர் துஷ்பிரயோகம் மற் றும் தடுப்பு நடவடிக்கைக்கான உலக சுகாதார ஸ்தாபனத்தின் ஆலோசனை (1999) அறிக்கை யின் சிறுவர் துஷ்பிரயோகம் பற்றிய விபரிப்பு இது பரந்த ளவில் உள்ளது.

பொதுவான வரைவிலக்கணம்: சிறுவர் துஷ்பிரயோகம் அல்லது கொடுமைப்படுத்துவது என்பதில கீழ் கண்டவை அடங்கும் எல்லா விதமான உடல் ரீதியான மற றும் உள ரீதியான பிழையான அல்லது எதிர்மாறான பராம ரிபபு பாலியல் துஷ்பிரயோகம், கவனிப்பின்றி வேண்டா வெறுப் பான பராமரிப்பு அல்லது வா்த்தக ரீதியான சுரண்டல்கள்.

இவைகளால் பிள்ளைகளின் ஆரோக்கியம், நீடித்த வாழ்வு, பொறுப்பு வாய்ந்த உறவுகள், நம்பிக்கை, அதிகாரம் ஆகி யவையின் கௌரவம் மற்றும் அபிவிருத்தியை உண்மையாகவோ அன்றோ அதற்குரிய சந்தர்ப பங்களையோ கெடுத்து விடும்.

### உடல்ரீதியான துஷ்பிரயோகம்

சிறுவர்களின் உடல் ரீதி யான துஷ்பிரயோகம் என்பது பெற்றோரால் அல்லது நம்பிக் கைக்குரிய, அதிகாரம் மற்றும் பொறுப்பான நிலையிலுள்ள ஒரு நபரின் கட்டுப்பாட்டின் கழ் பேணப்படும் உறவு முறை களால் அல்லது உறவு முறை கள் சரிவரப் பேணப்படாததால் நேரடியாக மற்றும் மறைமுக மாக உடல் ரீதியான தீங்கு இழைப்பது.

### பாலியல் துஷ்ரயோகம்

பாலியல் தொடாபின் தாற் பரியத்தை முழுமையாக விளங் கிக்கொள்ள முடியாமல், நல்ல தகவல் மூலம் சம்மதம் கொடுக்க முடியாத நிலையில், அதற்குப் பிள்ளை முதிர்ச்சியாக தயா ரான நிலையில் இல்லாததால் சம்மதம் கொடுக்க முடியாத நிலையில் மற்றும் சட்டங்க ளையும் அல்லது சமூகத்தடை களையும் மீறும் விதத்தில் பிளளை பாலியல் நடவடிக்கை யில் ஈடுபடுவது பாலியல் துஷ் பிரயோகம் ஆகும்.

வளர்ந்தோரால் அல்லது வயது மற்றும் பொறுப்பு வாயநத உறவு முறையிலுள்ளவர் தனது ஆசையை அல்லது தேவை யைப் பூர்த்திசெய்து திருப் திப்படுத்துவதற்காக ஒரு பிள் ளையுடன் தொடர்பு கொள்ளும் நடவடிக்கையால் வெளிப்படுத் தப்படுகிறது. இது கீழ்க்கண்ட வழிகளில் இருக்கலாம்.

* ஒரு பிள்ளையை சட்ட விரோதமாக பாலியல் நடவடிக் கைக்குத் தூண்டுதல் அல்லது ஆசை காட்டி வழிக்குக் கொண் டுவருதல்.

* விபசாரம் அல்லது வேறு சட்டவிரோத பாலியல் நடவ டிக்கைகளுக்குத் தகாத முறை யில் ஒரு பிள்ளையைப் பயன் படுத்துதல்.

* முறையற்ற விசரமான பாலியல் பொருட்கள், காட்சி களில் தகாத முறையில் பிள் ளைகளைப் பயன்படுததுதல்.

(உ.சு.ஸ்1999)

### உதாசீனம் மற்றும் வெறுப்பான பராமரிப்பு

ஒரு பிள்ளையின் விருத் திக்கு வேண்டிய ஆரோக்கியம, கல்வி, மன உணர்வுகளின் முதிர்ச்சி, போஷாக்கு, தங்கு மிடவசதி, பாதுகாப்பான வாழ்வு நிலைமை ஆகியவற்றை குடும் பம் மற்றும் பராமரிப்பாளரின் வளங்கள் தொடாபான வசதிகளில் கொடுப்பதைக் கவனத்தில் எடுக்காதநிலை மற்றும் பரா மரிப்பதில் தவறுவிடுவது அல் லது பிள்ளையின் ஆரோக்கி யம், உடல், உள, ஆன்மீக மற்றும ஒழுக்கம் மற்றும் சமூக விருத்திக்கு தீங்கு விளைவிப் பது அல்லது அதற்கான சாத் தியங்களை உண்டாக்குவதும் உதாசீனம் ஆகும். இயன்ற ளவு தீங்குகள் விளையாது பிள்ளையைப் பாதுகாப்பதும் மேற்பாாவை செய்வதும் இதில் அடங்கும்.

(உ.சு.ஸ் 1999)

### உணர்ச்சிகளின் துஷ்பிரயோகம்

ஒருபிள்ளை தான் வாழும் சூழலுக்கேற்றவாறு நிலையான முழுமையான தன்னுடைய சொந் தத் தகமைகளுக்கேற்ப உணர்ச் சிகள் மற்றும் சமூகத்தகுதி களை வளர்ப்பதற்குப் பொருத் தமான ஆதரவான சூழல் மற் றும் உதாரணமாகப் பிள்ளை பின்பற்றக்கூடிய ஒருவரைச் சார்ந்திருக்கத்தக்க வகையில் வைப்பது ஆகியவைகளைச செய்யத்தவறுவது என்பன உணர்ச் சிகளின் துஷ்பிரயோகத்தில் அடங்கும். பிள்ளை சார்ந்த சில நடவடிக்கைகள் அதன் ஆரோக் கியம், உடல், உள, ஆன்மீக மற்றும் ஒழுக்கம் மற்றும் சமூக விருத்திக்கு தீங்கு இழைப்பதோ அதற்குக் காரணமாக இருப் பதோ இதில் அடங்குகிறது இப் படியான நடைமுறைகள் நியா யமான முறையில் பெற்றோர் அல்லது பொறுப்பு, நம்பிக்கை, அதிகாரம் ஆகியவையுடன் தொடர்புடைய நபரின் கட்டுப் பாட்டில் இருக்க வேண்டும். இம் மாதியான நடவடிக்கைகள் போக்குவரத்திற்குத் தடை விதிப் பது ஏழனம் செய்யும் முறை கள், அவமானப்படுத்துதல், ஏமாளியாக்குதல், பயமுறுத துதல், பயங்கொள்ளச் செய் தல், பாரபட்சம் காட்டுதல் மற் றும் உடல் ரீதியற்ற ஆத்திர மூட்டும் வெறுப்பேற்படுத்தும் நடவடிக்கைகளும் அடங்கும்.

### சுரண்டல்

மறறவர்களின் நலனுக்காக பிள்ளையை தொழிலிலோ அல லது வேறு நடவடிக்கைகளிலோ ஈடுபடுத்துவது பிள்ளையை வா்த் தக ரீதியாகவோ வேறு வதத் கிலோ சுரண்டுவகாக அமையம். இதற்குள் பிள்ளைகளை வேலைக்கு அமர்த்துவதும் விபசாரத்தில் ஈடுபடுத்துவதும் அடங்கும். ஆனால் இவைமட்டுமல்ல இநத நட வடிக்கைகள் பிள்ளையின் உள, உடல், ஆரோக்கியத்திற்கும் கல்வி, ஒழுக்கம், சமூக உணா் வுகளின் விருத்திக்கும் இடை யூறாக அமையும்.

(உ.சு.ஸ் 1999)

### உடல் ரீதியான துஷ்பிரயோகம்

நல்ல முறையில் பராமரிக் கவோ தொழிலுக்குப் பயன் படுததவோ முடியாத அளவு ஏராளமான பிள்ளைகள் பிறந்த காலகட்டத்தில் நேரடியாகவோ மறைமுகமாகவோ பரவலான சிசுக் கொலைகள் மற்றும் உதாசீனம் நிகழ்ந்ததாக மேற் குலக வரலாறு எடுத்துக் காட் டுகின்றது. அதிலும் இத் தீமைக் குக் காரணமாகக் கருதப்பட்ட பெண்கள் விஷயத்தில் இது விசேஷமாக இடம் பெற்றது. சிறுவர்கள் வளர்ந்தோரின் சொத்து விசேஷமாகத் தந்தை யினுடையது. பெயர் சூட்டும் முன் பிள்ளைகள் கணக்கில் எடுக்கப்படுவதில்லை என்ற ஒரு தப்பான எண்ணத்தால் சிசுக கொலையை நியாயப்படுத்த இடம் உண்டானது. அனேகமாக நீரில் பிள்ளைகளை வீசுவது, பால் அல்லது உணவு ஆகியவற் றினை வேண்டுமென்று கொடுக் காது விடுவது மற்றும் ஆபத் தான சீதோஷ்ணத்தில் விடடு வைப்பது ஆகியவையும் இடம் பெற்றன.

சிறுவர் துஷ்பிரயோகம தெற் காசியாவில் நடப்பது அனேக மாக மறுக்கப்பட்ட பொழுதி லும் சோபகா என்னும் பைய னைப்பற்றிய புதத சமயக் கதைதான் 2599வருடங்களுக்கு முன் இந்தியாவில் நடநததாக வரலாற்றில் பதியபபடடுள்ளது. பொறாமையான மற்றாந் தந்தை யினால் நல்லடக்கம் செய்யும் இடத்தில் ஒரு இறந்த சடலத் துடன் ஓநாய்கள் புசிப்பதற் காக கட்டிவைக்கப்பட்டிருந்தான். புத்தர் அவனைக் காப்பாற்றி னார். அந்தப் பிள்ளைக்குப போதித்தார். சிலவேளைகளில் புராதன கால ஆலோசனை வழங் கிய சம்பவமாயிருககலாம். புத்த மத ஏடுகளில் கஞ்சனான ஒரு தந்தையால் மருத்துவப்பரா மரிப் பும் இன்றி வளாப்புத் தாயால் உதாசீனம் செய்யப்பட் கதையும் பதியப்பட்டுள்ளது.

முன்பு ஏற்பட்டதாகக் கருதப் படக்கூடிய நோய்களால் அன்றி உடல் ரீதியான பாதிப்பால் ஏற் பட்ட எலும்பு முறிவுகள் 1940, 1950களில் கண்டு கொள்ளப பட வில்லை. ஹென்றி கெம் பேயும் மற்றவர்களும் (1962) 'சிதறிய குழந்தைகள் நோய்' என வாணிக்கப்படும்வரை இந்த நிலமைதான்.

### சிறுவர் துஷ்பிரயோகத் தினை மறுதலிப்பதற்கு சமூகத்திலுள்ள விருப்பத் திற்கான காரணம் என்ன?

எமது நாட்டவர் விளையாட் டுக்களிலோ அல்லது வேறு நட வடிக்கைகளிலோ நலல முறை யில் செய்யப்பட்டால் நாம் தனி நபர்களாகவோ, சமூகமாகவோ, அல்லது தேசத்தவர்களாகவோ பெருமைப்படுகிறோம். இந்த வெற்றிகளுடன் சிறிதளவேனும் தொடர்பில்லாத நபர்கள்கூட தங்களையும் அதனுடன் இனம காட்டி அந்த வெற்றியை 'தமது சொநதமாக்க' விரும்புவர். எப் படியும் மறுபுறத்தில் உமது தேசிய குழு தோற்றுவிட்டாலோ அதற்கான பொறுப்பையோ சொந்தத்தையோ ஏற்றுக்கொள்ள விரும்பமாட்டீர்கள். ஏனெனில இந்த எதிர்மறையான பாதிப்பு தம்மிலும் பிரதிபலிக்கும் எனப்

(02ஆம் பக்கம் பார்க்க)

தம்பொருள் என்பதன் மக்கள் அவர்பொருள்
தம்தம் வினையான் வரும் - குறள்

வலம்புரி

# சிறுவர், முதியவர்களின் உணர்வை மதிப்போம்

இன்று சர்வதேச [illegible], முதியோர் தினம். உலகளாவிய ரீதியில கொண்டாடப்படும் இத் தினத்திற்குள் இருக்கக்கூடிய தார்ப்பரியங்கள் அனைவராலும் உணரப்படவேண்டியதொன்றாகும்.

உலகமயமாதல் உள்ளிட்ட பல்வேறு காரணங்களினால் இயந்திரமயமாகிவிட்ட மனித வாழ்வு இன்று அர்த்தமற்றதாகிப் போய்விட்டது.

குடும்ப உறவுகள், தாய் -பிள்ளைப் பாசம் என்பன கூட வர்த்தகமயப்படுமளவிற்கு மனித விழுமியம் அதல பாதாளத்திற்குத் தள்ளப்பட்டு விட்டது.

இத்தகைய கொடூரமான மனித வாழ்வியல் சிதைவுகள் வெளிநாடுகளில் அதிகமாக காணப்படுகின்ற போதிலும்,

அவற்றின் தாக்கம் குடும்ப உறவில் மிகவும் இறுக்கமான கட்டுப்பாட்டை கொண்டிருந்த தமிழினத்தையும் தாக்கவே செய்துள்ளது.

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்று பெற்றவர்களை தெய்வமாகப் போற்றி உலகிற்கே பெரும் தத்துவத்தை உணர்த்திய தமிழினம் இன்று தனது பண்பாட்டு விழுமியங்களை கைநழுவ விடுவதற்கு தயாராகிவிட்டது.

வெளிநாட்டு நாகரிக நாட்டம், சினிமாவில் கொண்டுள்ள மோகம், ஓய்வின்றி உழைக்கும் தன்மை, முதியவர்களை வெறுக்கும் மனப்பாங்கு போன்றவை காரணமாக நமது மண்ணில் எத்தனையோ முதியவர்கள் கவனிப்பாரின்றி அநாதைகளாக விடப்பட்டுள்ளனர்.

கூட்டுக் குடும்ப வாழ்க்கையில் குதூகலமாக இருந்த ஈழத் தமிழர் வாழ்வியல், யுத்தம் என்ற கொடூரம் காரணமாக சின்னாபின்னமாகிப் போனது. இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள் முதியவர்களும் சிறுவர்களுமே. யுத்தத்தால் ஏற்பட்ட இடப்பெயர்வு, குடியிருப்பதற்கு போதிய வசதியின்மை, வருமானம் இன்மை போன்றவை பத்து மாதம் சுமந்து பெற்று வளர்த்த பெற்றவர்களை பிள்ளைகளுக்கு சுமையாக்கியது. தாம் சுமந்து பெற்ற பிள்ளைகள், தள்ளாத வயதில் தம்மைச் சுமப்பார்கள் என்று எண்ணியிருந்த பெற்றவர்கள் பலர் முதியோர் இல்லங்களிலும் நலன்புரி நிலையங்களிலும் இருந்தவாறு முதுமையின் கொடுமையை எண்ணி கண்ணீர் வடிக்கின்றனர்.

இதேபோன்று சிறுவர்களின் நிலைமையும் மிகவும் பரிதாபத்திற்குரியது. வறுமையில் வாடும் பாலர்கள், குடும்ப பாரத்தை தாங்கும் சிறுவர்கள், பெற்றவர்களை இழந்து மனித வாழ்வை வெறித்துப் பார்க்கும் அநாதைகள் என்று ஒருபெரும் பட்டியலையே தயாரித்துவிட முடியும்.

இதற்கு மேலாக மது போதையில் வரும் தந்தையின் ஈவிரக்கமற்ற தாக்குதலை தாங்கும் பிஞ்சுடல்கள், வளர்ந்தவர்களின் கட்டளைகளை பயந்து நடுங்கி நிறைவேற்றும் குழந்தைகள் இப்படி எத்தனையோ சோக ரேகைகள் எம் மண்ணில் படர்ந்து போயுள்ளன.

இவை எல்லாவற்றிற்கும் அடிப்படைக் காரணங்களாக இருக்கக்கூடியது குடும்ப உறவே. அதனை செப்பனிடுவதன் மூலமே முதியவர்கள், சிறுவர்களின் உணர்வுகளை அறியவும் அதனை மதிக்கவும் முடியும்.

குறிப்பாக தனது கணவனின் பெற்றோரை வெறுக்கும் மனையாள், மனைவியின் தாய், தந்தையரை ஒதுக்கும் கணவன் என்ற மனித நேயமற்ற குடும்ப உறவு சீராக்கப்படவேண்டும்.

இளமையில் வறுமையும் முதுமையில் தனிமையும் கொடியதென்ற உண்மையை உணர்ந்து அனைவரும் வாழப் பழகிக்கொள்ள வேண்டும். இதுவே இன்றைய தினத்தில் நாம் எடுத்துக் கொள்ளவேண்டிய உறுதியுரையாகும்.

# மாணவிகளை இம்சைப்படுத்திய அதிபருக்கு பதினெட்டு மாத கால சிறைத்தண்டனை

(வவுனியா)

வவுனியாவில் உள்ள சிங்களப் பாடசாலை ஒன்றில் 13 வயது நிரம்பிய மூன்று மாணவிகளை பாலியல் ரீதியான இம்சைக்கு உட்படுத்தினார் எனும் குற்றச் சாட்டின் பேரில் பாடசாலை அதிபர் ஒருவருக்கு 18 மாத சிறைத் தண்டனையும் தலா 10ஆயிரம் ரூபா வீதம் முப்பதாயிரம் ரூபா தண்டப்பணம் செலுத்துமாறு வவுனியா மாவட்ட நீதவான் எம். இளஞ்செழியன் உத்தர விட்டுள்ளார்.

மேற்படி சம்பவம் கடந்த 2000ஆம் ஆண்டு ஆவணி மாதம் இடம்பெற்றுள்ளது. பாடசாலை முடிவடைந்த பின்னர் மாலை நேர வகுப்பு என்று கூறி மாணவிகளை தனித்தனியாக அறைக்கு அழைத்துச் சென்று பிரஸ்தாப அதிபர் அங்கசேட்டை புரிந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த சம்பவம் தொடர்பாக பெற்றோர்களாலோ அல்லது மாணவிகளாலோ பொலிஸில் முறைபாடு செய்யப்படவில்லை. எனினும் இந்த சம்பவம் தொடர்பாக சிங்களப் பத்திரிகை ஒன்றில் செய்தி வெளியானதன் பின்னா தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சேவை வவுனியா பொலிஸுக்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டு இருந்தது.

இதற்கு அமைவாக சட்டமா அதிபரின் பரிந்துரையின் பேரில் தண்டனை சட்டக் கோவை 345இன் கீழ் தனித்தனியாக 2002ஆம் ஆண்டு சித்திரை மாதம் வவுனியா நீதவான் நீதிமன்றில் வவுனியா பொலிஸாரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு விசாரணைகள் இடம் பெற்றன. வழக்கு விசாரணையில் பாடசாலை அதிபர், மாணவிகள், கல்வித் திணைக்கள அதிகாரிகள் ஆகியோர் சாட்சியம் வழங்கியிருந்தனர்.

இதற்கு இடையில் மாணவிகளும் பாடசாலை அதிபரும வெவ்வேறு பாடசாலைகளுக்குச் சென்று இருந்தனர். வழக்கு விசாரணைகள் தொடர்ந்தும் இடமபெற்றன.

கல்வித் திணைக்கள அதிகாரிகள் மாலைநேர வகுப்பு வைப்பதற்கு தாங்கள் அனுமதி வழங்கவில்லை என்று சாட்சியம் அளித்திருந்தனர்.

பாடசாலை அதிபா தன்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றமானது பொய்யானது என்றும், அரசியல் பின்னணி கொண்டது என்றும் தெரி[illegible]த்திருந்தார். இந்நிலையில் நேற்று முன் தினம் வழக்கு விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்டு இந்தியாவில் இவ்வாறான வழக்குகளில் வெவ்வேறு நீதிமன்றங்களில் வழஙகப்பட்ட தீர்ப்புக்களை மேற்கோள் காட்டி பிரஸ்தாப அதிபர் 18 மாத கால சறைத் தண்டனையும் பாதிக்கப்பட்ட மாணவிகள் ஒவ்வொருவருக்கும் தலா 10 ஆயிரம் ரூபா தண்டப் பணமும் வழங்க வேண்டும என்று வவுனியா மாவட்ட நீதவான் எம். இளஞ்செழியன் உத்தர விட்டார்.

(ரு)

# நாட்டின் சமாதான முன்னெடுப்புக்களை குழிதோண்டிப் புதைக்கிறது ஹெல உறுமய

## கையெழுத்து வேட்டைக்கு ஜோசப் எம்.பி. கண்டனம்

(மட்டக்களப்பு)

சமாதான முயற்சிகளை குழிதோண்டிப் புதைக்கும் வகையில் இனவாதம் இன்று ஜாதிக ஹெல உறுமய வடிவில் உருவெடுததுள்ளது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உப தலைவரும், தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜோசப் பரராஜசிங்கம தெரிவித்துள்ளார்.

நோர்வேயின் சமாதான அனுசரணைப் பணியை நிறுத்தக் கோரி ஜாதிக ஹெல உறுமயவினால் மேற கொள்ளப்படும் கையெழுத்து வேட்டை தொடர்பாக கருத்துக் கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.இதுதொடர்பாக அவர் மேலும் குறிப்பிடுகையில்,

காலத்துக்கு காலம் இனவாதம் இந்நாட்டிலே தூண்டப்பட்டுக் கொண்டு வருகிறது. அன்று பண்டா- செல்வா ஒப்பநதத்தை கிழித்தெறிய வழிகோலியவர்களும் இனவாதம் பேசுபவர்கள் தான். டட்லி-செல்வா ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தாமல் தடுத்தவர்களும் இவ்வினவாதிகள் தான்.

அதேபோன்று தான் இலங்கை-இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திட்ட போது கூட இதற்கு எதிராக போர் கொடி தூக்கியவர்களும் இவ்வினவாதிகள் தான்.

இனவாதம் இன்று ஜாதிக ஹெல உறுமயவின் வடிவில் உருவெடுத்துள்ளது.

இது இலங்கையில் காலத்திற்கு காலம் நடை பெறும் இனவாதிகளின் துவேச நடைமுறைதான்.

இன்றைய யதார்த்தத்தினை உணர்ந்து விடுதலைப்புலிகள் சமர்ப்பித்த இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை யோசனையை முன்னெடுக்க இவர்கள் முன்னிற்க வேண்டும், மீண்டும் ஒரு யுத்தம் நாட்டில் மூளுமாக இருந்தால் அழிவு இரண்டு தரப்பினருக்குமே ஏற்படும்.

தமிழீழ விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தையில் மிகப் பற்றுறுதியுடன் உள்ளனர். கொழுந்து விட்டெரியும் இனப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வந்து நாட்டில் அமைதியையும் சமாதானத்தையும் ஏற்படுத்த வேண்டுமானால் இவர்கள கையெழுத்து வேட்டை நடவடிக்கையினை விட்டு சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல முன்வரவேண்டும் என்றார்.

(ரு)

# மரக்கிளை முறிந்து விழுந்ததில் தாயும் மகளும் படுகாயம்

**வல்லிபுர ஆழ்வாரின் தீர்த்தோற்சவத்தில் சம்பவம்**

(பருத்தித்துறை)

வல்லிபுர ஆழ்வார் ஆலய தீர்த்தத் திருவிழாவின் போது ஆலயத்தின் வடக்கு வீதியிலுள்ள மஞ்சல் உணா மரத்தின் கிளை முறிந்து வீழ்ந்ததில் மரத்தின் கீழ் நின்ற சிறுமி ஒருத்தி தலையில் படுகாயமடைந்தார். சிறுமியின் தாயும் காயங்களுக்கு உள்ளானார்.

கடந்த செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.சம்பவத்தில் கரணவாய் மேற்கு கரவெட்டியைச் சேர்ந்த ஐயாத்துரை துவாரகி வயது (11) என்ற சிறுமியே தலையில் பலத்த காயங்களுக்கு உள்ளாகி மயக்கமுற்ற நிலையில் மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். சிறுமியின் தாயாரும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெறுகிறார்.

மரத்தின் கீழ் நின்று சிற்றுண்டி சாப்பிட்டுக் கொண்டிருந்த வேளையிலேயே மஞ்சல்உணா மரக்கிளை திடீரென முறிந்து விழுந்ததும் இதனால் படுகாயமடைந்த தாயும் மகளும் உடனடியாக மந்திகை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். (த,53,150)

# போரினால் சிறுவர்களுக்கே பெரும் பாதிப்பு

**சிறுவர் உரிமை மாநாட்டில் ஜனாதிபதி**

(கொழும்பு)

கடந்த இருபது வருடகாலமாக இடம்பெற்று வந்த உள்நாட்டு யுத்தம் காரணமாக பெருமளவில் இளைஞர்களும், யுவதிகளும், சிறுவர்களுமே பாதிக்கப்பட்டுள்ளனர் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற தெற்காசிய வலய நாடுகளைச் சேர்ந்த சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் மாநாட்டின் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில், இலங்கையில் உள்ள ஆயுதக்குழுக்களை உற்று நோக்கும் போது அதில் அங்கத்துவம் வகிப்போரில் 90 வீதமானவர்கள் 8 வயது முதல் 25 வயதுக்குட்பட்டவர்களாகக் காணப்படுகின்றனர்.

படைத்தரப்பிலும் 18 வயது முதல் 30 வயதுக்குட்பட்ட இளைஞர்களே காணப்படுகின்றனர். கடந்த காலங்களை கவனமாக எடுத்து உற்று நோக்கிப் பார்ப்போமானால் இலங்கையில் அதிகளவான சிறுவர் துஷ்பிரயோகங்கள் நடைபெற்றுள்ளன.

2002ம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் தொடர்பான மாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களுக்கு அமைய இலங்கையில் பல நடவடிக்கைகளை ஐ.நா சபை ஆரம்பித்து மேற்கொண்டு வருகிறது. சமீபத்தில் ஆரம்பிக்கப்பட்ட தேசிய சிறுவர் திட்டமும் அதில் ஒன்றேயாகும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

கல்வியே சிறுவர் வளர்ச்சியையும், பாதுகாப்பையும் உறுதி செய்யக் கூடிய சிறந்த முதலீடு என்று அரசாங்கம் கருதுகின்றது. இதனை அடிப்படையாகக் கொண்டே கல்விச் சீர்திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன என்றும் ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டார்.

(இ-121)

# தினசரி தியானம்

## விவேகச் சிந்தனைகள்

**உங்களை உள்ளதை உள்ளபடி உணருங்கள். செய்ய வேண்டியதெல்லாம் அதுவே. உங்களை உள்ளபடி உணருங்கள். அதாவது நீங்கள் எல்லையற்ற ஆன்மா என்பதை உணருங்கள். இதுதான் செயல்முறை மதம். வேறு எதுவும் செயல்முறைக்கு ஒத்துவராதவை. ஏனெனில் அவை எல்லாம் மறைந்து விடும். அது ஒன்று தான் மறையாது.**

சுவாமி விவேகானந்தர்

# சிறுவர் உரிமைகள் மனிதாபிமானத்துடன் மதிக்கப்படுவது மிகவும் இன்றியமையாதது

## சுயாதீன மனிதஉரிமைக்கான முறைப்பாட்டு நிலையம் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

சிறுவர்கள் வேலைக்கு அமர்த்தப்படுவது உட்பட அவர்கள் மீதான துன்புறுத்தல்களுக்கும் முற்றுப்புள்ளி வைப்பதுடன் எதிர்கால சந்ததியினரான சிறுவர்களை மனிதாபிமானத்துடன் நடாத்துவதும் இன்றியமையாதது.

சர்வதேச சிறுவர்தினத்தையொட்டி சுயாதீன மனிதஉரிமைக்கான முறைப்பாட்டு நிலையம் வெளியிட்டுள்ள பத்திரிகை அறிக்கையில் இவ்வாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

வெளியிடப்பட்டுள்ள மேற்படி அறிக்கையில்,

உலகில் பொருளாதாரச் சமச்சீரற்ற தன்மை மற்றும் எமது திறந்த பொருளாதாரத்தின் நேரடித் தாக்கத்தினால் சிறுவர்கள் வறுமையின் கோரப்பிடியில் சிக்கித்தவிக்கின்றார்கள்.

அதில் விசேடமாக மூன்றாம் உலக நாடுகளில் சிவில் யுத்தம், வறுமை, பஞ்சம், சுகாதாரமின்மை மற்றும் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் போன்றவற்றால் பெரிதும் துன்பமடைகின்றனர். அதேபோல் இலங்கையில் மனிதஉரிமை ஆணைக்குழுவின் அறிக்கையின்படி காணாமல்போனோரில் ஏறக்குறைய நான்காயிரத்து ஐந்நூறு பேர் சிறுவர்கள் என்பது சிந்திக்கவேண்டியது.

அதேபோல் வடக்கு கிழக்கில் பல ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் யுத்தத்தினால பெற்றோரை இழந்து வாடுகின்றார்கள். அங்கவீனர்களாக, பாடசாலை செல்லாதவர்களாக, பசி பட்டினியுடன் பல சிறுவர்கள் துன்பத்தை அனுபவிக்கிறார்கள்.

அத்துடன் சிறுவர்கள் வியாபார ஸ்தாபனங்கள், உணவகங்கள் மற்றும் மதவழிபாட்டுத்தலங்கள் போன்றவற்றில் வேலைக்கு அமர்த்தப்படுவதை நாம் அன்றாடம் காணுகின்றோம். இந்த நிலைமை உடனடியாக நிறுத்தப்பட்டு சிறுவர்களை மனிதாபிமானத்துடன் நோக்கவேண்டும்.

என்ன நோக்கத்துக்காகப் போராட்டம் முன்னெடுக்கப்படுகிறதோ அதனை முன்னெடுப்பவர்கள் இன்றைய சிறார்களான எதிர்கால பிரஜைகளே. எனவே இது உண்மையானால் சிறுவர்கள் விடயத்தில் அனைவரும் கரிசனையுடன் செயல்படவேண்டும். (ற)

# நேர்முகப் பரீட்சை

(கொழும்பு)

அரசாங்க எழுதுவினைஞர் சேவை வெற்றிடங்களை நிரப்புவதற்காக எழுதுவினைஞர்களை தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை நாளை சனிக்கிழமையும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் பின்னர் எதிர்வரும் 9ஆம் திகதி சனிக்கிழமையும் நடைபெறவுள்ளதாக பொதுநிர்வாக உளநாட்டலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது.

அடைமழை, வெள்ளப்பெருக்கு போன்ற காரணத்தால் கடந்தவாரம் நடைபெற்ற நேர்முகப்பரீட்சைக்கு தோற்றாத பரீட்சார்த்திகள் இந்த பரீட்சையில் தோற்றமுடியும் எனவும் அமைச்சு மேலும் அறிவித்துள்ளது. (க-60)

# முதியோர் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

அரியாலை அபிவிருத்தி சங்கத்தின் ஏற்பாட்டில் முதியோர் தினத்தையொட்டி இன்று மாலை 4.30 மணிக்கு சங்கத் தலைவர் எஸ்.ரி.பத்மநாதன் தலைமையில் முதியோர் கௌரவிப்புவிழா சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை மாவட்ட நீதிபதி க.அரியநாயகம் கலந்துகொள்ளவுள்ளார். (ற-19)

# சுகாதார சேவைகள் பணிப்பாளராக டாக்டர் தெய்வேந்திரன் நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக வைத்திய கலாநிதி இ.தெய்வேந்திரன் நியமிக்கப்பட்டுள்ளார். வடக்குக் கிழக்கு மாகாணசபை இந்நியமனத்தை வழங்கியுள்ளது.

யாழ். பிராந்தியத்தின் தாய்சேய்நல வைத்திய பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிய வைத்திய கலாநிதி இ.தெய்வேந்திரன் யாழ். மாநகரசபையின் சுகாதார வைத்திய அதிகாரியாகவும், தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரியாகவும் கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ந)

# அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழகத்தில் மீன்பிடியியல் டிப்ளோமா கற்கைநெறியினை பூர்த்திசெய்து வெளியேறிய 1 ஆம், 2 ஆம், 3 ஆம், 4 ஆம் அணி மாணவர்களின் வேலைவாய்ப்பு நியமனங்கள் தொடர்பான அவசர கலந்துரையாடல் ஒன்று யாழ்பல்கலைக்கழக கடல்வள அபிவிருத்தி நிலையத்தில் இன்று வெள்ளிக்கிழமை பி.ப. 1 மணிக்கு நடைபெறவுள்ளது. எனவே குறிப்பிட்ட கற்கைநெறிகளை பூர்த்திசெய்து வெளியேறிய மாணவர்கள் கல்வித்தகைமை சான்றிதழ், டிப்ளோமா பட்டச்சான்றிதழ், தேசிய அடையாள அட்டை ஆகியவற்றின் நிழற்படபிரதிகளுடன் சமுகம் தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (க)

# புலிகளின் உயர்மட்டக்குழு...

கூடுகிறது. தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், புலிகளின் மூத்த பிரமுகர் கா.வே.பாலகுமாரன் ஆகியோர் சுவிஸிற்குச் செல்கின்றனர்.

மேலும், விடுதலைப் புலிகளின் சட்ட ஆலோசகர் உருத்திரகுமார், மலேசியாவிலுள்ள சட்டத்துறைப் பேராசிரியர் இராமசுவாமி, முன்னாள் சட்டமா அதிபர் சிவா பசுபதி, ஆலோசகர்களான இமானுவேல்பிள்ளை, அவுஸ்ரேலியா சட்டப் பேராசிரியர் போல் டொமினிக் மற்றும் அரசியல் விஞ்ஞான ஆலோசகர் விஸ்வேந்திரன், ஜனாதிபதியின் ஆலோசகர் ராமாணிக்கேலிங்கத்தின் மருமகனும் சிங்கப்பூர் பல்கலைக் கழகத்தின் அரசியல் விஞ்ஞானப் பேராசிரியருமான சொர்ணராஜா ஆகியோர் அடங்கிய கூட்டு ஆலோசனைக் குழுவும் இக் கூட்டத்தில் பங்கேற்கிறது.

அத்துடன் நாளை கட்டுநாயக்காவில், இருந்து சுவிற்சர்லாந்துக்குப் புறப்படும் வடக்குக் கிழக்கு மனிதஉரிமைகள் அமைப்பின் பிரதிநிதிகளும் அங்கு கலந்துகொள்ளவிருக்கின்றனர்.

இன்றும் நாளையும் ஜெனிவாவில் நடைபெறும் கூட்டத்தில் சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய இராஜதந்திர நகர்வுகள், அரசின் பொய்ப்பிரசாரத்தை முறியடிக்க வகுக்கவேண்டிய வியூகங்கள், இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை திட்டவரைபில் மேற்கொள்ளவேண்டிய செம்மையாக்கல்கள், வடக்குக் கிழக்கு மனிதஉரிமைகள் அமைப்பின் சட்டயாப்புத் தயாரித்தல், சர்வதேச நாடுகளின் ஆதரவைத் திரட்ட வகுக்கவேண்டிய திட்டங்கள் என்பன குறித்து விரிவாகவும், ஆழமாகவும் ஆராயப்படவிருக்கிறது.

அத்துடன் மூன்றுவாரகாலம் ஐரோப்பிய மற்றும் ஸ்கணடினேவிய நாடுகளில் தங்கியிருக்கும் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் அந்நாடுகளின் அரசியல் தலைவர்கள், சட்டவல்லுநர்களுடன் கலந்துரையாடுவதுடன், ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்..

எதிர்வரும் 7 ஆம் திகதி நோர்வேக்குச் செல்லும் இக்குழுவினர் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம், பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன் ஆகியோருடன் பேச்சு நடத்தவிருக்கின்றனர். (த)

# கொடிவாரம்

(யாழ்ப்பாணம்)

அனைத்துலக சிறுவர் தினம் மற்றும் அனைத்துலக உளநல தினம் ஆகியவற்றை முன்னிட்டு இன்றுமுதல் எதிர்வரும் 10 ஆம் திகதிவரை யாழ். குடாநாடு முழுவதும் கொடிவாரம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

யாழ். மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுவும், சாந்திகமும் இணைந்து இந்நிகழ்வினை மேற்கொள்ளவுள்ளன.

இத்தினங்களில் 'சிறுவர்களின் உயரிய நலனைக் காக்க', 'அன்பாக இருப்போம் ஆறுதல் பெறுவோம்' போன்ற வசனங்கள் பொறிக்கப்பட்ட கொடிகளை சிறுவர்கள் அணிந்து இத்தினத்தை கொண்டாடுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ச)

# ஒளிப்பேழை வெளியீடு

உலக சிறுவர்தினத்தை முன்னிட்டு தமிழர் புனர்வாழ்வு கழக சிறுவர் இல்லங்களிற்கான புனரமைப்பிற்கும் அபிவிருத்திக்குமான நிறுவகம் தமிழீழ விளையாட்டு துறையின் ஒழுங்கமைப்புடன் நடாத்தும் மாபெரும் விளையாட்டு விழாவும், தமிழர் புனர்வாழ்வுக்கழக சிறப்பு வெளியீடான 'உதிக்கும் திசையில் சிரிக்கும் மலர்கள்' காண் ஒளிப்பேழை தொகுப்பு வெளியீட்டு நிகழ்வும் கிளிநொச்சி மைதானத்தில் நடைபெறவுள்ளது. (ச)

# வட-கிழக்கு மனித உரிமைகள்..

குழு வட்டாரங்களில் இருந்து தகவல் வெளியாகியுள்ளது.

இதேவேளை, சுவிற்சர்லாந்தில் தங்கியிருக்கும் விடுதலைப் புலிகளின் உயர் மட்டக்குழுவினரோடு பாராளுமன்ற உறுப்பினர்கள் இணைந்துகொண்டு முக்கிய வெளிநாட்டு அரசியற் தலைமைச் சந்திப்புக்களில் ஈடுபடலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (இ-05)


# உலக சிறுவர் தினம் ஒக்டோபர் 1

இன்றைய தினத்தில் சிறுவர் உரிமைகளிற்காக இணைந்து செயற்படுகின்ற அனைத்து நெஞ்சங்களிற்கும் நன்றி கூறுகின்றோம்!!!!!!!!!






என்றும் எம்முடன் இணைந்திருங்கள்

(C/602)

உங்கள் தொடர்புகளிற்கான முகவரி

மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு

அறை எண் 30, போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம் T.P:2225657


# ஐந்துசந்தியில் மோதல்

(யாழ்ப்பாணம்)

யாழ். ஐந்துசந்திப் பகுதியில் நேற்று மாலை இருதரப்பினருக்கிடையே ஏற்பட்ட மோதலினை அடுத்து வீதிமறிப்புப் போராட்டம் இடம்பெற்றது.

நேற்றிரவு 9 மணிவரை போராட்டம் நடைபெற்றதை அடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் மறியலில் ஈடுபட்டோரைக் கலைத்ததுடன், அவர்களின் பிரதிநிதிகளுடன் பேசி நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

இதேவேளை, தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய இளைஞர் ஒருவர் யாழ். பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ச-34)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது வட்டு மத்திய கல்லூரியில் அளப்பரும் சேவையாற்றி ஓய்வுபெற்ற ஆசிரியர்



பாக்கியலக்ஸ்மி சிவராஜாதேவா

அவர்களது ஓய்வுக்காலம் சிறக்க எல்லாம் வல்ல பிட்டியம்பதியாளை பிரார்த்திக்கின்றோம்.

வட்டு மத்திய கல்லூரி
உயர்தர மாணவர் மன்றம்

(C/600)


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல. 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.10.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.